# தமிழகத் தொன்மைச் சின்னங்கள்

## பாதுகாப்பு அறிக்கை 2002—2005

பதிப்பாசிரியர்

தி.ஸ்ரீ. ஸ்ரீதர், இஆப

சிறப்பு ஆணையர்



தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சென்னை - 600 008.

# தமிழகத் தொன்மைச் சின்னங்கள்

பாதுகாப்பு அறிக்கை 2002-2005

பதிப்பாசிரியர்

தி.ஸ்ரீ. ஸ்ரீதர், இஆப.

சிறப்பு ஆணையர்

வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை - பொதுப்பணித்துறை

சென்னை - 600 008.

# தமிழகத் தொன்மைச் சின்னங்கள்

பாதுகாப்பு அறிக்கை 2002-2005

பதிப்பாசிரியர்

தி.ஸ்ரீ. ஸ்ரீதர், இஆப.

வெளியீட்டு எண்: 165

அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,
142, ஜானி ஜான் கான் ரோடு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

# பதிப்புரை

வரலாறு என்பது கடந்த காலத்தை நம் மனக் கண்முன் கொண்டுவரும் ஒரு காலக் கண்ணாடியாகும். இத்தகைய வரலாறுகளை நம் முன்னோர்கள் அறிவியல் முன்னேற்றம் இல்லாத காலகட்டத்திலும் ஆக்கப்பூர்வமாக சிந்தித்து செயல்பட்டதன் விளைவாக வருங்காலச் சந்ததியினருக்குத் தெளிவாக அறிவிக்கும் முகமாக செயல் வடிவில் ஓலைச்சுவடிகள், செப்புப் பட்டயங்கள், கல்வெட்டுகள் மூலம் அதன் ஆதாரங்களை நிலைத்து நிற்கச் செய்துள்ளனர். இதைப் போன்று அவர்களது கலைநுட்பம் மற்றும் கற்பனைத் திறனை வெளிக்காட்டும் வகையில் கட்டடக் கலையில் அழகிய நுண்வேலைப்பாடுகளையும், கற்றளிகளையும், கற்சிலைகளையும் காலப்போக்கில் அரண்மனைக் கட்டடங்களையும் உருவாக்கினர்.

இத்தகைய பாரம்பரிய கலை உணர்வுகள், காலத்தின் கோலத்தால் இயற்கை சீற்றங்கள், அறிவியல் முன்னேற்றம் காரணமாக மாசு, தட்பவெப்பநிலை, பறவைகளின் எச்சங்களினால் வளரும் தாவரங்கள், மனிதர்களின் அறியாமையாலும் வெகுவாக பாதிப்பு அடைந்து அழிவுறும் நிலை ஏற்படுகிறது.

தமிழ்நாடு, பாரம்பரிய கலைக்கு கருவூலங்களாக கோயில்கள், கோட்டைகள், அரண்மனைகள், சத்திரங்கள் மற்றும் நினைவிடங்களை அதிக அளவில் கொண்டுள்ள

தாகும். இந்த வரலாற்றுச் சுவடுகள் பெரும்பாலும் ஆரம்பக் காலத்தில் சில கோயில்கள், மதிற்சுவர், கட்டடங்கள் ஆகியவை செம்பராங்கல் கொண்டு கட்டுமானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. செங்கல் மற்றும் களிமண்/ சுண்ணாம்பு கொண்டு ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டடங் களையும் காணலாம். கட்டுமானத்திற்கு உபயோகப்படுத் தப்படும் கட்டுமானப் பொருட்கள் அதன் தொன்மை காரணமாக திடத்தன்மை இழந்த நிலை ஏற்படுவதால் வலுவிழந்து அழிவுறும் நிலைக்குத் தள்ளப்படுகிறது.

இப்பாரம்பரிய கலை உணர்வுடைய, நூறு ஆண்டு களுக்கு மேற்பட்டு நிலைத்து நிற்கும் கட்டடங்கள், ஓவியங்கள், கல்படுக்கைகள், கல்பதுமைகள் அல்லது இவற்றில் ஒரு பகுதி அழிவுற்று எஞ்சி நிற்கும் யாவும் வரலாற்றுச் சின்னங்களாக பாதுகாப்பில் எடுத்துக் கொண்டு நமக்குப் பின்னர் வரும் சந்ததியினர் நம் முன்னோர்களின் வரலாறு, அவர் தம் கலைச் சிறப்பு (ம) ஆட்சியின் மேன்மை ஆகியவற்றை உணர்ந்துகொள்ளும் முகமாக தமிழக அரசால் தொல்லியல் துறை என்ற ஒரு துறை ஏற்படுத்தப்பட்டு இதற்கான தனிச்சட்டமாக தொல்லியல் சின்னங்கள் பாதுகாப்பு சட்டம் 1966 (சட்டம் 25/1996) இயற்றப் பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் கீழ் 88 நினைவுச் சின்னங்கள் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அரசால் ஆண்டுதோறும் ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீடு நீங்கலாக, மத்திய அரசின் மூலம் பெறப்பட்ட பதினோராவது நிதிக்குழு பரிந்துரை தொகையிலிருந்து ரூ. 428.31 இலட்சம் 26

சின்னங்களின் 34 பணிகளுக்கு கீழ்க்கண்ட அரசாணை மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

* அரசாணை எண். 42/தமிழ் வளர்ச்சி - பண்பாடு (ம) அற நிலையத் (அதொ2) துறை, நாள் 14.3.2002
* அரசாணை எண். 232/தமிழ் வளர்ச்சி - பண்பாடு (ம) அற நிலையத் (அதொ2) துறை, நாள் 25.9.2002
* அரசாணை எண். 73 / தமிழ் வளர்ச்சி - பண்பாடு (ம) அறநிலையத் (அதொ2) துறை, நாள் 16.5.2002
* அரசாணை எண். 143 / தமிழ் வளர்ச்சி - பண்பாடு (ம) அறநிலையத் (அதொ2) துறை, நாள் 8.8.2003.
* அரசாணை எண். 283 / தமிழ் வளர்ச்சி - பண்பாடு (ம) அறநிலையத் (அதொ2) துறை, நாள் 27.11.2003.
* அரசாணை எண். 44 / தமிழ் வளர்ச்சி - பண்பாடு (ம) அறநிலையத் (அதொ2) துறை, நாள் 16.2.2004.

மேற்கண்ட அரசாணையில் அனைத்துப் பணிகளையும் பொதுப்பணித் துறை மூலமாக மேற்கொள்ள அறிவுறுத்தியதன்பேரில் தொல்லியல் கோட்பாடுகளை, பணிகளில் கடைப்பிடிக்க ஏதுவாக, மத்தியத் தொல்லியல் துறையிலிருந்து ஓய்வு பெற்ற உதவி கண்காணிப்பு தொல்லியல் பொறியாளரான திரு. எம்.ஜி. செல்லப்பிள்ளை அவர்களை நியமனம் செய்து தொழில்நுட்ப கோணத்தில் உதவிட கேட்கப்பட்டது.

தொல்லியல் சின்னங்களின் பாதுகாப்புப் பணிகள் பொதுப்பணித் துறையின் பணிகளிலிருந்து வேறுபட்டதாகும். எனவே, தொல்லியல் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்கவும் அதன் பழமைத் தன்மை மாறாமல் பணி மேற்கொள்ள ஏதுவாகவும் சில நிபந்தனைகள் கீழ்க்கண்ட விபரப்படி பொதுப்பணித் துறைக்கு அறிவிக்கப்பட்டது.

* ஒப்பந்தக்காரர்கள் பாதுகாப்புச் சின்னங்களில் பணி மேற்கொண்டமைக்கான முன் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

* தொல்லியல் கோட்பாடுகளின்படி பணி மேற்கொள்ள ஏதுவாக ஸ்தபதி / சுதைக் கொத்தனார், சிறப்புப் பொருட்கள் ஆகியவற்றைப் பணிகளில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

* சின்னங்களின் எழில்மிகு / பழமைத் தோற்றம் எந்த வகையிலும் பாதிப்பு அடையக்கூடாது.

* மேற்கொள்ளப்படும் காரைப்பூச்சு சிமெண்டு சுண்ணாம்பு கலந்த கூட்டுக் கலவைக் காரையினை 1 : 1 : 5 என்ற விகிதத்தில் கலந்து உபயோகப்படுத்துதல் வேண்டும். மத்தியத் தொல்லியல் துறையினால் அடையாளங் காணப்பட்டதன்படி உப்புத் தன்மை குறைவாகக் காணப்படும் பொள்ளாச்சி சுண்ணாம்பு உபயோகப்படுத்துதல் வேண்டும். உபயோகப்படுத்தப் படும் காரையில் கடுக்காய் மற்றும் வெல்லம் கலந்த சாற்றினை ஒரு கனமீட்டருக்கு 12 கிலோ என்ற சம விகிதத்தில் கலந்து உபயோகித்தல் வேண்டும்.

* ஏற்கனவே சின்னங்களில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள செங்கல்லின் அளவு மாறாத வகையில் இருத்தல் வேண்டும்.

* இதைப்போன்று பயன்படுத்தப்படும் மரக்கட்டைகள் பர்மா தேக்கு எனப் பொதுப்பணித் துறைப் பொறியாளர் களால் சான்று பெறப்பட்ட நிலையில் உபயோகப் படுத்துதல் வேண்டும்.

* கட்டுமானத்திற்குச் சிமெண்டு-சுண்ணாம்பு கலந்த கூட்டுக் கலவைக் காரையினை மட்டுமே உபயோகப் படுத்துதல் வேண்டும். எந்தக் காரணம் கொண்டும் சுத்த சிமெண்டு உபயோகித்தல் கூடாது.

* பணி நடைபெறுகையில், பணியினை ஆய்வு செய்யும் தொல்லியல் துறை அலுவலர்களால் அறிவிக்கப்படும் முறைகளைத் தவறாது கடைப்பிடித்தல் வேண்டும்.

* பழைய காரைப்பூச்சினை அகற்றுகையில் ஏதேனும் புதிதாக மறைந்து காணப்படின் உடனடியாகத் தொல்லியல் துறை கவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட நிலையில் அனுமதி பெறப்பட்டுப் பணி தொடரப் படுதல் வேண்டும்.

* பழைய காரைப்பூச்சு / கட்டடப் பகுதிகளை அகற்றும் பொழுது எந்த அதிர்வும் இல்லாத நிலையில் கவனமாக மின் கருவிகளைக் கொண்டு அகற்றப்படுதல் வேண்டும்.

* கூடுமானவரையில் பணியின்பொழுது விழுந்த பழைய கட்டுமானப் பொருட்களையே உபயோகப் படுத்துதல் அவசியம்.

* பழைய கட்டடப்பகுதி / பூச்சு ஆகியவற்றை அகற்றுகையில் உரிய தாங்கு அமைப்பினை ஏற்படுத்திடின் கூரைப்பகுதி பளு இல்லாத நிலையில் பணி மேற்கொள்வதற்கு ஏதுவாக அமையும்.

தொல்லியல் வரலாற்றுச் சின்னங்களின் பாதுகாப்பு பணி பற்றிய இப்புத்தகம் வெளியிடுவதற்கு இத்துறையின் மூலம் நியமனம் செய்யப்பட்டிருந்த தொல்லியல் கலந்தறி-தற்குரியர் அளித்த ஆய்வுக் குறிப்புகளின்பேரில் இத்துறையின் பொறியாளர்களால் அளிக்கப்பட்ட குறிப்புகளின் அடிப்படையிலும் தொல்லியல் துறையின் கல்வெட்டுப் பிரிவு அலுவலர்கள் அளித்த ஆதாரங்களின் அடிப்படையிலும் இந்நூல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. 26 சின்னங்களில் 18 சின்னங்களுக்கு பணிகள் ஆங்கில வடிவத்திலும் 8 சின்னங்களுக்கானப் பணிகள் தமிழ் வடிவிலும் வெளியிடப்பட்டுள்ளது.

11வது நிதிக்குழு பணித் தொடர்பாக அரசுக்கு கருத்துரு அனுப்பிய முன்னாள் இயக்குநர், திரு. அ. அப்துல் மஜீத், அதனைத் தொடர்ந்து இப்பணி செவ்வனே நடந்திட கருத்துக்களை நல்கிய முனைவர் கண்ணன் இ.ஆ.ப., அவர்களும், இப்பணி தொடர்ந்து நடந்திடவும், நூற்று விகித கட்டணமின்றி பணி செய்திடவும் வழிவகுத்த திரு. அசோக் வரதன் ஷெட்டி இ.ஆ.ப.,

அவர்களும் அதனைத் தொடர்ந்து சில மதிப்பீடுகளை மேலொப்பம் செய்து தந்த திரு. சீத்தாராம் குருமூர்த்தி இ.ஆ.ப., அவர்களும் போற்றுதலுக்குரியவர்கள் ஆவார்கள்.

தமிழக அரசின் தொல்லியல் துறை மூலமாக 11-வது நிதிக் குழுவின் மூலம் பெறப்பட்ட நிதியில் பொதுப்பணித் துறை மூலம் அத்துறையின் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) திரு. எஸ். ஜெயச்சந்திரமோகன், பி.இ. மற்றும் அவர் ஆளுகைக்குட்பட்ட செயற்பொறியாளர்கள் மற்றும் திரு. அன்புமணி, சிறப்பு தலைமைப் பொறியாளர், பொதுப்பணித் துறை கட்டடம், தஞ்சாவூர், திரு. மாமுண்டி, செயற்பொறியாளர், திரு. சந்திரசேகரன், உதவி செயற் பொறியாளர், திரு. தளபதி, உதவிப் பொறியாளர், பொதுப் பணித்துறை கட்டடம், தஞ்சாவூர் மற்றும் அவர்களது சார்நிலைப் பணியாளர்கள் மூலம் காலம் தவறாது முடிக்கப் பட்ட அனைத்துப் பணிகளைப் பற்றி நான் எனது பாராட்டுதலையும், நன்றியறிதலையும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். இந்த நூலினைத் தயாரித்து வெளிக்கொணர உதவிய தொல்லியல் துறையின் பணி யாளர்களான திரு. வெ. இராமமூர்த்தி, வரலாற்றுக்கு முந்தைய அகழாய்வாளர், திரு. ரா. நாராயணன், தொல்லியல் பாதுகாப்பு இளநிலைப் பொறியாளர், திரு. கோ. குணசேகரன், தொல்லியல் பாதுகாப்பு உதவிப் பொறியாளர், திரு. இரா. சுவாமிநாதன், தொல்லியல் பாதுகாப்பு இளநிலைப் பொறியாளர், திரு. த. தங்கவேல், தொல்லியல் பாதுகாப்பு உதவிப் பொறியாளர் திரு. குமாரராசா கண்காணிப்பாளர் ஆகியோரையும் நினைவு கூற விரும்புகிறேன்.

மேலும் இந்நூல் வெளிவர உரிய நிழற்படங்களை எடுத்து உதவிய நிழற்படக்காரர் திரு. மு.த. ஸ்ரீதரன், சிறப்பு ஆணையரின் நேர்முக உதவியாளர்கள் திரு. வெங்கட சுப்பிரமணியன், திருமதி பா. வளர்மதி ஆகியோரும் நினைவுகூரத் தக்கவர்கள் ஆவர்.

T. S. Sridhar

நாள் : 29.3.2005
சென்னை - 8

(தி. ஸ்ரீ. ஸ்ரீதர்)
சிறப்பு ஆணையர்

# தமிழகத் தொன்மைச் சின்னங்கள் பாதுகாப்பு அறிக்கை

## உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| பதிப்புரை | | i |
| வரைபடம் | | xi |
| **கோயில்கள்:** | | |
| 1. | மகாதேவர் கோயில், இடையார்பாக்கம் | 1 |
| 2. | கங்கை கொண்ட சோழீஸ்வரர் கோயில், கூழம்பந்தல் | 9 |
| 3. | சிவன் கோயில், பழூர் | 16 |
| 4. | சிவன் கோயில், ஆலம்பாக்கம் | 22 |
| 5. | சிவன் கோயில், அரிட்டாபட்டி | 28 |
| 6. | சிவக்கொழுந்தீஸ்வரர் கோயில், சிவன்கூடல் | 32 |
| 7. | இலாடன் கோயில், ஆனைமலை | 39 |
| **பாறை ஓவியங்கள்** | | |
| 1. | ஆலம்பாடி, விழுப்புரம் மாவட்டம் | 43 |
| இரசாயனப் பாதுகாப்பு அறிக்கை | | 49 |
| சின்னங்களில் உள்ள கல்வெட்டுகள் | | 53 |
| வரலாற்றுச் சின்னங்கள் பட்டியல் | | 71 |
| துறை வெளியீடுகள் பட்டியல் | | 81 |

# காஞ்சிபுரம் மாவட்டம்,
# திருபெரும்புதூர் வட்டம்
# மகாதேவர் கோயில், இடையார்பாக்கம்

காஞ்சிபுரம் மாவட்டம், திருபெரும்புதூர் வட்டம், இடையார்பாக்கம் கிராமத்தில் அமைந்துள்ள மகாதேவர் கோயில் இத்துறையின் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னமாகும். தொன்மையான நினைவுச் சின்னங்கள், தொல்லியல் இடங்கள் மற்றும் எச்சங்கள் சட்டம் 1966 (சட்ட எண். 25 / 1966) - ன்படி அரசாணை எண். 352 / தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறை / நாள் 23.10.1987 மூலம் தொல்லியல் பாதுகாக்கப்பட்ட சின்னமாக அறிவிக்கப்பட்டு இத்துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

## வரலாற்று முக்கியத்துவம் :

பல்லவர் மற்றும் சோழர் காலத்திய வரலாற்றுத் தொடர்புடைய இவ்வூரின் மேற்கே ஏரிக்கரையில் சோழர் கால கற்றளிக்கோயில் அமைந்துள்ளது. தூங்கானை மாட வடிவத்துடன் அமைந்துள்ள இக்கோயில் கருவறை மற்றும் அர்த்த மண்டபத்தை கொண்டுள்ளது. இரு தள அமைப்புடைய விமானம் கற்றளியாக உள்ளது. இக் கோயிலில் முதல் குலோத்துங்கன் மற்றும் இரண்டாம் இராசராசன் கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. இங்கு


Mahadevar Koil - Edayarpakkam
4.65
10.00
3.05
1.30
3.20
அர்த்தமண்டபம் 1.80
2.70
1.30
N

தரைப்படம்

மகாதேவர் கோயில், இடையார்பாக்கம் - பணிக்கு முன்

மகாதேவர் கோயில், இடையார்பாக்கம் - பணிக்கு பின்

காணப்படும் சிலைகள் பிற்காலச் சோழர் காலத்தைச் சார்ந்தவையாகும்.

## கோயிலின் நிலை :

ஊரின் எல்லையில் ஆள் நடமாட்டம் இல்லாத பகுதியில் இக்கற்றளி கோயில் அமைந்துள்ளது. கருவறையின் மேற்கூரை வரிகற்கள் பெயர்ந்த நிலையில் மழைத் தண்ணீர் கருவறையினுள் ஒழுகாத வண்ணம் தார்ப்பாலின் கொண்டு மூடப்பட்டுள்ளது. செடிகொடி களின் ஊடுருவலின் தாக்கமாக ஆங்காங்கு வெடிப்புகள் ஏற்பட்டும், வரிக்கற்கள் பெயர்ந்து விழுந்தும், விலகியும், காணப்படுகிறது. கோயிலின் உட்புறம் செல்வதற்கேற்ப சிமெண்டு காரைக் கொண்டு படிக்கட்டுகள் கட்டுவிக்கப் பட்டுள்ளன.

பதினோராவது நிதிக்குழு பரிந்துரையின் அடிப்படை யில் அரசாணை எண். 283 த.வ.ப. (ம) அ.றி. (அ.தொ.உ.) துறை நாள் 27-11-03 மூலம் 7.00 இலட்சம் அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதை தொடர்ந்து இச்சின்னத்தில் மேற்கொள்ளப்பட வேண்டடிய பணிகள் அடையாளங் கண்டு, தொல்லியல் கோட்பாடுகளின்படி பணியினை பொதுப்பணித் துறையினர் மேற்கொள்வதற்கு ஏதுவாக, மத்திய தொல்லியல் துறையின் ஒப்புதல் பெற்ற உதவி கண்காணிப்பு தொல்லியல் பொறியாளர் திரு. எம்.ஜி. செல்லப்பிள்ளை நியமனம் செய்யப்பட்டு மேற்பார்வையிட பணிக்கப்பட்டது.

அடையாளங்கண்ட பணிகள் :

* ஆங்காங்கு காணப்படும் மண்மேட்டினை மிக கவனமாக அகற்றி புதைந்திருக்கும் கற்றளிகளின் பாகங்கள் இருக்குமாயின் வெளிக் கொணருதல்.

* கோயிலின் வரிக்கற்களை மிக கவனமாக எண் களிட்டு வரிசைப்படி அடுக்குதல்

* அடித்தளத்தினை திடப்படுத்திய நிலையில் மீண்டும் எண்களின் வரிசைப்படி கட்டுமானம் மேற் கொள்ளல். கட்டுமானம் மேற்கொள்ளுகையில் தூய சிமெண்டு, உபயோகிப்பதற்கு பதிலாக சிமெண்டு, சுண்ணாம்பு கலந்த கூட்டுக் கலவைக் காரையினை மட்டும் பயன்படுத்துதல்.

* கற்றளியின் மேல் உராயும் மரக் கிளைகளை அகற்றி அப்புறப்படுத்துதல்.

* அர்த்த மண்டபத்தின் தரைப் பகுதியில் கற்பலகை யினை சமதளமாக சரிசெய்து அதன் இடைவெளிப் பகு;ியில் கூட்டுக்கலவைக் காரை கொண்டு பூசுதல்.

* ஆங்காங்கு இல்லாதிருக்கும் வேலித்தாங்கு கம்பங் களில் புதியதை நிலை நிறுத்தி முட்கம்பி வேலி அமைத்தல்.

* கோயிலின் உட்புற வரிக்கற்களில் கிறுக்கப்பட்டிருக்கும் எழுத்துக்களை உரிய இரசாயனத்தை பயன்படுத்தி முழுமையாக அகற்றுதல்.

* கோயில் நுழைவாயிலில் உள்ள கற்றளி பிரேமின் அடிப்பக்க வரிக்கற்களை அகற்றி புதியதாக அமைத்தல்.

* விமானத்தின் மேல்பக்கம் உள்ள இடைவெளியினை புதிதாக வரிக்கற்கள் அமைத்து மூடுதல்

* பணியினை மேற்கொள்வதற்கு முன்பாக உரிய வகையில் நிழற்படம் மூலம் அதன் நிலையினை பதிவு செய்தல்.

மேற்கொள்ளப்பட்ட பணிகள் :

* வேலிக்குட்பட்ட பகுதியில் வளர்ந்து காணப்பட்ட கொடிகள் மற்றும் பலதரப்பட்ட செடிகள் அப்புறப் படுத்தப்பட்டன.

* கோயிலினைச் சுற்றி மண்மேடுகள் அகற்றப்பட்டு, மண்ணிற்குள் புதைந்து காணப்பட்ட கற்றளி வரிக் கற்கள் அப்புறப்படுத்தப்பட்டு பணிக்கு ஏற்ற வகையில் சரி செய்யப்பட்டது.

* விதிமுறைகளின்படி பிரிக்கப்பட வேண்டிய உள் மற்றும் வெளி வரிக்கற்களுக்கு முறைப்படி எண் களிடப்பட்டது.

* தொல்லியல் கோட்பாடுகளின்படி கோயிலின் வரிக்கற்களை பிரிப்பதற்கு முன்பாக நிழற்படங் களின் மூலம் பதிவு செய்யப்பட்டது.

* கோயிலின் வெளி மற்றும் உள் வரிக்கற்கள் எண் களின்படி வரிசைப்படி பிரிக்கப்பட்டு மீண்டும் உபயோகப்படுத்தும் வகையில் அடுக்கப்பட்டது. உள் மற்றும் வெளி வரிக்கற்களுக்கு இடைப்பட்ட கான்கிரீட் பகுதி (Core wall) அகற்றி எடுக்கப்பட்டது.

* அகற்றப்பட்ட வரிக்கற்களைக் கொண்டு, அடித் தளத்தை திடப்படுத்திய நிலையில் மீண்டும் அதே பாணியில் கட்டுமானம் மேற்கொள்ளப்பட்டது.

பணிகள் நடைபெற்று வருகையில் 6.8.2004 அன்று சிறப்பு ஆணையர் அவர்களால் பணிகள் ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வின்பொழுது சில குறிப் பிட்ட பணிகள், பணிகளில் எஞ்சும் சேமிப்புத் தொகையில் ஈடுகட்டும் வண்ணம் பணிகள் அறிவுறுத்தப்பட்டது.

* தேவகோட்டங்களில் உள்ள சிற்பங்களின் உடைந்த பகுதிகளை சுதையால் அமைத்து பழமை மாறாமல் அமைக்க வேண்டும்.

* கோயிலின் உச்சிப் பகுதியினை முன்பு இருந்தது போல சுதையால் அமைக்கலாம்.

* கோயில் பணியின்பொழுது அகற்றப்பட்ட தேவையில்லாத உடைந்த கற்களை பாதுகாக்கப்பட்ட பகுதிக்குள் வைக்கப்படின் எதிர்காலத் தேவைக்கு உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

தூங்கானை மாட வடிவத்துடன் அமைக்கப் பெற்ற சோழர்கால இக்கோயில் பிற்கால தலைமுறையினருக்கு ஓர் எடுத்துக்காட்டாக பொலிவுடன் திகழ்கிறது.

★ ★ ★

# திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம் - கூழம்பந்தல் கங்கை கொண்ட சோழீஸ்வரர் கோயில்

கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கங்கை கொண்ட சோழீஸ்வரர் கற்றளிக் கோயில், கூழம்பந்தல் என்று தற்போது குறிக்கப்படும் சிற்றூரில் உள்ளது. கல்வெட்டுக்களில் இவ்வூர் கங்கை கொண்ட சோழபுரம், விக்ரம சோழபுரம் எனக் குறிக்கப்படுகிறது. இராசேந்திர சோழனுடைய 22-வது ஆட்சி ஆண்டில் கி.பி. 1034-ல் கட்டி முடிக்கப்பட்ட இக்கோயில் தொன்மையான நினைவுச் சின்னங்கள், தொல்லியல் இடங்கள் மற்றும் எச்சங்கள் சட்டம் 1966-ன் கீழ் அரசாணை எண். 23, தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத்துறை, நாள் 12.2.93-ன்படி பாதுகாக்கப்பட்ட சின்னமாக அறிவிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது.

**கோயிலின் நிலை :**

இக்கற்றளி இருதள விமானத்தைக் கொண்டுள்ளது. விமானத்தின் இரண்டாம் தளம் கர்ணக்கூடு (ம) சாலை அமைப்புடன் உள்ளது. கருவறை அர்த்த மண்டபம், முகமண்டபம், மகாமண்டபம் ஆகியவற்றுடன் அழகிய துவார பாலகர்களும் உள்ளனர். தெற்கில் பிச்சாடனர்,




தரைப்படம்

தட்சிணாமூர்த்தி, அரிகரன், மேற்கில் விஷ்ணு, இலிங்கோத்பவர், வடக்கில் சுப்பிரமணியர், பிரம்மா ஆகிய கோஷ்ட சிற்பங்கள் உள்ளன. அர்த்த மண்டபத்தின் தெற்கில் கணபதியும், வடக்கில் துர்க்கையும் உள்ளது. மகாமண்டபம் கூரையின்றி தூண்களுடன் காணப்படுகின்றன. அனைத்துச் சிற்பங்களும் முதலாம் இராஜேந்திர சோழன் காலத்தைச் சேர்ந்தவையாகும்.

அரசால் பதினோராவது நிதிக்குழு பரிந்துரையின் பேரில் அரசாணை எண். 283 தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத்துறை (அதொ2) நாள் 27.11.03-ல் ரூ. 7.00 இலட்சம் நிதி ஒப்புதல் பெறப்பட்டது. பணியினை அடையாளங்கண்டு பொதுப்பணித் துறைக்கு உதவ

கங்கை கொண்ட சோழீஸ்வரர் கோயில், கூழம்பந்தல் - பணிக்கு முன்

கங்கை கொண்ட சோழீஸ்வரர் கோயில், கூழம்பந்தல் - பணிக்கு பின்

ஏதுவாக ஓய்வு பெற்ற மத்திய தொல்லியல் துறை உதவி கண்காணிப்புப் பொறியாளர் திரு. எம்.ஜி. செல்லப்பிள்ளை என்பவரை அரசு நியமனம் செய்தது.

அடையாளங் காணப்பட்ட பணிகள் :

- கருவறையின் மேலே போடப்பட்டுள்ள பொய்க்கூரையின் பலகைகள் (ம) தாங்குகட்டைகளை புதுப்பித்தல்.
- முகமண்டபம், மகாமண்டபம் தரைத்தளப் பகுதிகளை அதன் நிலைக்கு சமப்படுத்தி சிமெண்டு, சுண்ணாம்பு கலந்த கூட்டுக் க்லவைக் காரையினைக் கொண்டு பதிதல்.
- வெளி (ம) உள்புற கற்றளிச் சுவர்களில் உள்ள இடைவெளிகளை கூட்டுக் கலவை கொண்டு பதிதல்.
- கோயில் கூரைக்கு மேலே உள்ள செங்கல், ஜல்லி, சுண்ணாம்பு கான்கிரிட் கல்வையினை அகற்றி உரிய சாய்தள அமைப்புடன் மீண்டும் செங்கல் ஜல்லி சுண்ணாம்பு கொண்டு கான்கிரீட் போட்டு தட்டோடு அமைத்தல்.
- விமானக் கட்டுமானம் (ம) கல்வெட்டுக்களில் காணப்பட்ட பாசி (ம) அழுக்குகளை அகற்றுதல்.
- கோயில் அணுகு பாதையினை சீர் செய்தல்.

- ஆங்காங்கு காணப்படும் உதிரிச் சிற்பங்களை மேடை கட்டி அமைத்தல்.
- கோயிலின் முன்புறம் உள்ள திறந்த வெளி தூண் மண்டபத்தில் செடிகள் வளரா வண்ணம் கருங்கல் ஜல்லித் துகலினை 4 அங்குள கனத்தில் நிரப்புதல்.
- ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள முட்கம்பி வேலியினை மீண்டும் புதுப்பித்தல்
- கருவறை மேல்புற கூரையில் அமைக்கப்படும் பொய்க் கூரையில் (False ceiling) கரையான் பிடிக்காத வகையில் வண்ணம் அடித்தல்.

மேற்கொள்ளப்பட்ட பணிகள் :

- கோயிலின் மேற்கூரையின் மேல் பாவப்பட்டிருந்த செங்கல் ஜல்லி (ம) சுண்ணாம்பு கான்கிரீட் அகற்றப் பட்டு உரிய சாய்தள அமைப்புடன் மீண்டும் புதுப் பிக்கப்பட்டு, தட்டோடு பொருத்தப்பட்டது.
- பாதுகாக்கப்பட்ட பகுதிக்குள் காணப்பட்ட செடி, கொடிகள் அகற்றப்பட்டது.
- உரிய இரசாயன முறையில் பாசி மற்றும் அழுக்கு களை கற்றளி, விமானம் மற்றும் கல்வெட்டிலிருந்தும் அகற்றப்பட்டன.

- செங்கல் ஜல்லி கான்கிரீட் போடப்பட்டு அர்த்த மண்டபம், மற்றும் மகாமண்டபத் தளப் பகுதிகளில் கருங்கல் பாதை அதன் நிலைக்கு அமைக்கப்பட்டு பதியப்பட்டது.
- மகாமண்டபம் கற்றளிச்சுவர் மீது குறிப்பிட்ட உயரத் திற்கு ஏற்ற வகையில் செங்கல் கட்டுமானம் கட்டப் பட்டு கூட்டுக்கலவைக் காரைக் கொண்டு பூச்சு பூசப்பட்டது.
- கோயில் கதவு, அர்த்த மண்டபம் நுழைவுப் பகுதியில் அமைக்கப்பட்டது.
- ஆங்காங்கு காணப்பட்ட உதிரி சிற்பங்கள் மேடை கட்டப்பட்டு நிலை நிறுத்தப்பட்டது.
- புதிதாக முட்கம்பி வேலி அமைக்கப்பட்டது.
- கருவறையின் மேல்புறம் பொய்க்கூரை போடப்பட்டு வண்ணம் அடிக்கப்பட்டது.
- அறிவிப்பு மற்றும் தகவல் பலகை பொருத்தப்பட்டது.
- முற்றத்தின் நான்கு பகுதிகளில் மழைநீர் தொட்டி கட்டப் பட்டு மழைநீர் வெளியேறும் வகையில் அமைப்பு மேற் கொள்ளப்பட்டது.

மேற்கண்ட பணிகள் நீங்கலாக சேமிப்புத் தொகையில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

- ☐ வலை அமைப்பு பிரேமுடன் நுழைவாயிலில் அமைத்தல்
- ☐ பாதுகாக்கப்பட்ட பகுதியிலிருந்து கோயிலின் உட்புறம் செல்ல ஏதுவாக அணுகுசாலை அமைத்தல்.

சிறப்பு ஆணையர் அவர்களால் இரு நாட்கள் முகாம் மேற்கொள்ளப்பட்டு பணிகள் ஆய்வு செய்யப்பட்டன. ஆய்வுப்பணி மேற்கொள்ளுகையில் துறையின் அனுமதி பெறாமல் எடுக்கப்பட்டிருந்த மின் இணைப்பினை அகற்ற அறிவுரை வழங்கியதன் பேரில் கிராம நிர்வாக அலுவலர் மூலம் உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இக்கோயில் நடைபெற்ற பாதுகாப்புப் பணிகளினால் மேலும் பல நூற்றாண்டுகளுக்கு நிலைத்து நிற்கும் தனித்தன்மை பெற்றுள்ளது.

* * *

# திருச்சி மாவட்டம், பழூர் - சிவன் கோயில்

திருச்சி மாவட்டம் மற்றும் வட்டத்தினைச் சேர்ந்த பழூர் கிராமத்தில் உள்ள சிவன் கோயில் அதன் வரலாற்று முக்கியத்துவம் கருதி தொன்மையான வரலாற்று நினைவுச் சின்னங்கள் தொல்லியல் இடங்கள் மற்றும் எச்சங்கள் சட்டம் 1966-ன்படி அரசாணை எண். 1733 / கல்வி - அறிவியல் துறை, நாநள் 30.7.1982 மூலம் பாதுகாக்கப்பட்ட சின்னமாக அறிவிக்கப்பட்டது.

## கோயிலின் நிலை :

பலதரப்பட்ட செடி, கொடிகள் சூழ்ந்து காணப்பட்ட இக்கோயில், பார்வையாளர்கள் உட்புறம் செல்ல இயலாத நிலையில் காணப்பட்டது. இதேபோன்று கட்டிடத்தின் மேல்புறம் மற்றும் பக்க சுவர்களிலும் கபோதக வரிக் கற்களுக்கு இடையிலும் செடி, கொடிகள் வளர்ந்து காணப் பட்டன. கோயிலின் மேல்தளத்தில் இயற்கையாக பாதிப்பு அடைந்து கான்கிரீட் சிதிலமடைந்து காணப்பட்டது. துவாரபாலகர் சிலைகள் அதன் நிலைவிட்டு விலகி கீழே விழுந்துள்ளது. கபோதக வரிக்கற்கள் ஆங்காங்கு அதன் எதிர் பளு குறைவினால் (Counter weight) கீழே விழுந்து காணப்பட்டது. உள் மண்டபம் கூரைப்

பாவுக்கல் இரண்டாக உடைந்து தொங்கிய நிலையில் உள்ளது. இது மிகவும் அபாயகரமானதாகும். கோயில் உட்புற தரைத் தளம், சிதைந்தும் கருங்கல் சுவர்ப் பகுதிகள் பெயர்ந்தும் காணப்பட்டன. கோயிலினைச் சுற்றி காணப் பட்ட வேலி அமைப்பு சாலையிலிருந்து கீழிறக்கமாக காணப்பட்டது. இதனால் மழைக் காலத்தில் வேலி யினைச் சுற்றி தண்ணீர் தேங்குதலால் ஏற்படும் பாதிப்பினை, தாங்கு கம்பங்களில் காண முடிந்தது.

இந்நிலையில் அரசாணை எண். 283 / தமிழ் வளர்ச்சி - பண்பாடு (ம) அறநிலையத் துறை / நாள் 27.11.2003-ன்படி பதினோராவது நிதிக்குழு பரிந்துரை யின் அடிப்படையில் அரசால் ரூ. 4.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு பொதுப்பணித்துறை மூலமாக பணிகள் மேற்கொள்ள அறிவிக்கப்பட்டது.

பொதுப்பணித் துறையினருக்கு, தொல்லியல் கோட்பாடுகள்படி பணிகள் மேற்கொள்ள உரிய தொழில் நுட்ப விதிமுறைகளை எடுத்துக்கூற ஏதுவாக மத்திய தொல்லியல் துறையின் ஓய்வு பெற்ற உதவிக் கண் காணிப்புப் பொறியாளர் திரு. எம்.ஜி. செல்லப்பிள்ளை அவர்களை அரசு நியமனம் செய்தது.

## அடையாளங் காணப்பட்ட பணிகள் :

- அடர்ந்த வனப் பகுதியினைப் போல பலதரப்பட்ட செடி, கொடிகளால், கோயில் மறைக்கப்பட்டிருந்தது. எனவே செடி, கொடிகளை முழுமையாக அகற்றிடவும்

* கோயிலின் மேல்தளத்தின் காரைப்பூச்சு மற்றும் செங்கல் ஜல்லி கான்கிரீட்டினை அதிர்வு ஏற்படாத வகையில் உரிய தாங்கு அமைப்பு உட்புறம் ஏற்படுத்தி அகற்றுதல்.

* உடைந்த பாவுக்கல்லினை மிக கவனமாக அகற்றி அதே கனபரிமானத்தில் புதிய பாவுக்கல் பொருத்துதல்.

* கீழே விழுந்து கிடந்த துவார பாலகர் சிலைகளை அதன் கோஷ்டத்தில் மீண்டும் நிலை நிறுத்துதல்

* கோயில் மேல்தளத்தில் அதன் தேவையற்ற வகையில் பளு ஏற்றாது சுண்ணாம்பு, செங்கல் ஜல்லி கான்கிரீட் தளம் தண்ணீர் எளிதாக வெளியேறும் நிலையில் உரிய சாய்வு அமைப்பு ஏற்படுத்தி தட்டோட்டினை பதித்தல்.

* கோயில் உட்புற தளம், வெளிப்புற மற்றும் உட்புற வரிக்கற்கள் இடைவெளிப் பகுதியில் சுண்ணாம்பு சிமெண்டு கலந்த கூட்டுக்காரையினைக் கொண்டு பதித்தல்.

* கோயிலின் மேல்புறம் சுற்றி காணப்பட்ட கபோதக வரிக்கற்களினைத் தாங்கும் எதிர்பளுக்கற்களான செங்கல் கட்டுமானத்தை திடப்படுத்தி, சுண்ணாம்பு, சிமெண்டு கலந்த கூட்டுக்கலவைக் காரையினைக் கொண்டு பூசுதல்.

* கோயிலைச் சுற்றி அமைக்கப்பட்ட வேலியினை அதன் தாங்கு கம்பத்துடன் அகற்றி பல அளவுடைய (Random rubble) கருங்கற்களைக் கொண்டு இரண்டு அடி உயரத்திற்கு கட்டுமானம் எழுப்பி கம்பி வலை வேலி (chain link fencing) பொருத்துதல்.

## மேற்கொள்ளப்பட்ட பணிகள் :

மூன்று முறை இக்கோயிலின் பணிக்கு பொதுப்பணித் துறையால் ஒப்பந்தக்காரர்கள் அழைக்கப்பட்ட நிலையில் பணிகள் 2.8.2004 அன்று தொடங்கப்பட்டது.

* கோயிலின் உட்புறம் செல்ல இயலாதவாறு அடர்ந்து காணப்பட்ட செடி, கொடிகள் அகற்றப்பட்டது.

* 2 அடி உயரத்திற்கு சுற்றுச் சுவர் பலதரப்பட்ட அளவுடைய கருங்கற்களை கொண்டு எழுப்பப்பட்டு அதன் மேல் தாங்கு இரும்பு கம்பங்கள் நிலை நிறுத்தப்பட்டு கம்பி வலை வேலி அமைக்கப்பட்டது.

* கோயிலினைச் சுற்றி உள்ள பகுதிகளில் கள ஆய்வு செய்யப்பட்டு ஆங்காங்கு வைக்கப்பட்டிருந்த கற்றளிகளின் பாகங்கள் சேகரித்து எடுத்து வரப் பட்டது.

* கோயில் சுவர்களின் மேல் வளர்ந்து காணப்பட்ட செடி களை அகற்று முகமாக கூரையின் மேலே வைக்கப் பட்டிருந்த 4 நந்திகள் கீழிறக்கி வைக்கப்பட்டு, செடிகள் முழுமையாக அகற்றப்பட்டன.

* ஆங்காங்கு தன்நிலை விட்டு விலகி காணப்பட்ட வியாழவரி மற்றும் பூத வரிகள் அதன் நிலையில் பொருத்தப்பட்டு இடைவெளி பதியப்பட்டது.

* உடைந்து காணப்பட்ட பாவுக்கல் அதே கன பரிமானத்தில் மீண்டும் பொருத்தப்பட்டது.

* கோயில் கூரைப்பகுதியில் தண்ணீர் எளிதாக வெளியேறும் நிலையில் உரிய சாய்வு அமைப்புடன் சுண்ணாம்பு, செங்கல், ஜல்லி கான்கிரீட் போடப் பட்டது.

* கபோதக வரிக் கற்களின் எதிர்பளு கற்களாக 2' - 0'' அடி உயரத்தில் செங்கல் கட்டுமானம் மேற்கொள்ளப் பட்டது.

* கீழே விழுந்து கிடந்த துவாரபாலகர் சிலைகள் அதன் கோஷ்டத்தில் நிலை நிறுத்தப்பட்டது.

* கோயிலின் உட்புறம் செல்ல வாயில் படிகள் எதுவும் இல்லாததால் கருங்கற்களைக் கொண்டு வாயில் படி அமைக்கப்பட்டது.

* கோயிலினைச் சுற்றி வருவதற்கு எதுவாக கருங்கல் பலகை கொண்டு பாதை அமைக்கப்பட்டது.

இப்பணிகள் நீங்கலாக அரசால் மேற்படி கோயிலுக்கு அறிவிப்பு (ம) தகவல் பலகை அமைக்க நிதி ஒதுக்கப்

பட்டதையடுத்து வழவழப்பான எனாமல் பலகை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

மிகவும் பாதிப்பு அடைந்திருந்த இக்கோயில் அரசின் நிதி ஒதுக்கீட்டால் கூடுதல் பொலிவடைந்து அதன் வரலாற்றுச் சிறப்பினை வரும் தலைமுறையினருக்கு உணர்த்துமுகமாக நிலைத்துள்ளது.

★ ★ ★

# திருச்சிராப்பள்ளி மாவட்டம் இலால்குடி வட்டம், ஆலம்பாக்கம் கைலாசநாதர் கோயில்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி வட்டம், ஆலம்பாக்கம் கைலாசநாதர் கோயில் இத்துறையின் பாதுகாக்கப்பட்ட சின்னமாக (அரசாணை எண். 1109/கல்வித்துறை / நாள் 17.6.1978-இல் தமிழ்நாடு தொன்மையான வரலாற்றுச் சின்னங்கள் (ம) தொல்லியல் இடங்கள் (ம) எச்சங்கள் சட்டம் 1966 (25/1966)-இன்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

**கோயிலின் நிலை :**

இக்கற்றளிக் கோயில் கருவறை, முகமண்டபம், இடைநாழி (அந்தராளம்) மகாமண்டபம், சாவகாச அந்தராளம் கொண்டுள்ளது. கோயிலின் மதிற்சுவர் கருங்கற்களால் குறிப்பிட்ட உயரத்திற்கு கட்டப்பட்டு அதன் மேல் செங்கல் சுவர் பாவப்பட்டுள்ளது. கோயிலின் மேற்புறம் சிறிய குளம் கோயிலின் தளமட்டத்திற்கு மேலே உள்ள தளத்தில் அமைந்துள்ளது. இதன் ஊற்று காரணமாக மழை காலத்தில் கோயிலைச் சுற்றி தண்ணீர் தேங்கும் நிலை ஏற்படுகிறது. ஆங்காங்கு கோயிலின் பிரகார மதில் சுவரிலும், பிரதான கோயிலின் சுவர்ப் பகுதிகளிலும் செடிகள் வளர்ந்து காணப் படுகின்றன. கோயில் கூரைக்கு மேல் உள்ள தளப்பகுதி

ஆங்காங்கு சிதிலமடைந்து காணப்படுவதால் மழை காலத்தில் மழைநீர்க் கசிவு ஏற்பட்டமைக்கான எச்சங்கள் காணப்படுகின்றன. பிரதான கோயில் மற்றும் அதன் வடபுறத்தில் தெற்கு நோக்கிய அம்மன் சன்னதியிலும் நுழைவாயில் இல்லை. கோயிலைச் சுற்றிக் கல்வெட்டு கள் காணப்படுகின்றன. மகாமண்டபத்தின் வடக்கு மூலையில் கோயில் கட்டப் பயன்படுத்திய அளவுகோல் செதுக்கப்பட்டுள்ளது.

பதினோராவது நிதிக்குழுப் பரிந்துரையின் பேரில் அரசாணை எண். 283 / தமிழ் வளர்ச்சி - பண்பாடு (ம) அறநிலைய (அதொ2)த்துறை / நாள் 27.11.2003-ல் இக் கோயில் பாதுகாப்புப்பணி தொடர்பாக ரூ. 8 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதையடுத்து ஒதுக்கப்பட்ட நிதித் தொகையில் கோயிலின் சிதிலமடைந்த பழுதுகளைச் சீர்செய்யும் வண்ணம் நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக தொல்லியல் மத்திய தொல்லியல் துறை உதவி கண்காணிப்பு பொறியாளர் (ஓய்வு) திரு. எம்.ஜி. செல்லப் பிள்ளை கலந்தறிதற்குரியராக நியமனம் செய்யப்பட்டு பணிகள் அடையாளங் காணப்பட்டன.

அடையாளங் காணப்பட்ட பணிகள் :

* அருகில் உள்ள குளம் உயரமான இடத்தில் அமைந்துள்ள காரணத்தினால் அதன் ஊற்று காரணமாக மழை காலங்களில் கோயிலின் உட்பிரகாரத்தைச் சுற்றி மழைநீர் தேங்குவதை முற்றிலும் தவிர்க்கும் பொருட்டு அதன் நீர்நிலையைக் கட்டுப்படுத்து முகமான பணிக்கு ஒதுக்கப்பட்ட தொகை போதுமானதாக இல்லை. எனவே கோயிலில் பழுதுபார்க்கும் நடவடிக்கை மட்டும் மேற்கொள்ளப்பட்டது.

* பிரதான கோயில், மற்றும் அம்மன் கோயில், நுழைவாயிலில் வாயிற்கதவு அமைத்தல்.

* சன்னதிகளைச் சுற்றி சிதிலமடைந்துள்ள மதிற் சுவரின் கற்களை அதன் நிலையில் எடுத்து வைத்து சுண்ணாம்பு (ம) சிமெண்டு கலந்த கூட்டுக் கலவைக் காரையினைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புதல்.

* பிரகாரத்தில் பக்தர்கள் எளிதாக நடந்து சென்று தரிசனம் செய்யும் வகையில் கருங்கல் பலகை கொண்டு தளம் அமைத்தல்.

* கோயில் சுவரின் மேற்புறம் (ம) மதிற் சுவரின் உட்புறம், வெளிப்புறம் வளர்ந்து காணப்படும் செடி, கொடிகளை அகற்றுதல்.

* கோயிலைச் சுற்றி முட்கம்பி வேலி அமைத்தல்
* கோயில் சன்னதிகளில் வெளவால் புகாவண்ணம் வலை அமைப்பு ஏற்படுத்துதல்.

மேற்கொள்ளப்பட்ட பணிகள் :

பொதுப்பணித் துறையால் 13.8.2004-ல் பணிகள் தொடங்கப் பட்டன.

* கோயில் மேற்தளத்தில் பழைய காரைப்பூச்சுகள் முழுவதுமாக அகற்றப்பட்டு, உரிய சாய்வு அமைப்புடன் செங்கல், ஜல்லி, சுண்ணாம்பு கொண்டு கான்கிரிட் போடப்பட்டு ஓடு பொருத்தப்பட்டது.
* மதிற்சுவர்ப் பகுதியில் விலகியிருந்த வரிக்கற்கள் அதன் நிலையில் சரியாகப் பொருத்தப்பட்டு இடைவெளிப் பகுதிகள் சிமெண்டு, சுண்ணாம்பு கலந்த கூட்டுக்கலவைக் காரை கொண்டு நிரப்பப் பட்டது.
* மதிற்சுவரின் குறிப்பிட்ட உயரத்திற்கு மேலே செங்கற் கட்டுமானம் மேற்கொள்ளப்பட்டு அதன் மேற்பகுதி ஏற்கெனவே உள்ள செங்கல் கட்டுமானம் போன்று கூம்பு வடிவத்தில் கட்டப்பட்டது.

- பிரதான கோயிலின் மேற்தளத்தினைச் சுற்றிக் காணப்பட்ட செங்கல் கட்டுமானப் பகுதி சிமெண்டு, சுண்ணாம்பு கொண்ட கூட்டுக் கலவைக் காரை யினைக் கொண்டு பூசப்பட்டது.

- சிதிலமடைந்து காணப்பட்ட தென்மேற்கு மூலையில் இருந்த சுற்றுக் கோயிலின் வரிக்கற்கள் முழுமை யாகப் பிரிக்கப்பட்டு மீண்டும் அதன் நிலையில் பொருத்தப்பட்டது.

- கோயிலின் அனைத்து வரிக்கற்கள் பகுதிகளிலும் ஆங்காங்கு காணப்பட்ட இடைவெளிகளில் சந்து பதியப்பட்டது (Pointing).

- கோயிலைச் சுற்றி முட்கம்பி வேலி அமைக்கப் பட்டது.

பணி நடைபெறுகையில் 25.9.2004 அன்று சிறப்பு ஆணையர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டது. அதுபோது ஆங்காங்கு முளைத்துக் காணப்பட்ட செடி கொடிகளை வேருடன் அகற்றவும், கூரையில் மழைநீர் இறங்காத வகையில் அமைப்பு ஏற்படுத்தவும், பணிகளை துரிதமாக முடிக்கவும் அறிவுறுத்தப்பட்டது.

மேற்படி பணிகளைத் தவிர, இக்கோயிலைப் பற்றிய தகவல் (ம) அறிவிப்புப் பலகை அமைக்க அரசால் தனியான நிதி ஒதுக்கப்பட்டதையடுத்து, தகவல் (ம) அறிவிப்பு பலகையும் பொருத்தப்பட்டது.

* * *

# மதுரை மாவட்டம், அரிட்டாப்பட்டி சிவன் கோயில்

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், அரிட்டாப்பட்டி சிவன்கோயில் இத்துறையின் பாதுகாக்கப்பட்ட சின்னமாக அதன் வரலாற்று முக்கியத்துவம் கருதி, தொன்மையான நினைவுச் சின்னங்களின் தொல்லியல் இடங்கள் மற்றும் எச்சங்கள் சட்டம் 1966-ன்படி அரசாணை எண். 1109 கல்வித் துறை நாள் 17.6.78-ன் மூலம் தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

## வரலாற்று முக்கியத்துவம் மற்றும் நிலை :

இக்கோயில் கி.பி. எட்டாம் நூற்றாண்டில் "திருப்பிணையன் மலை"யின் மேல்புறம் சிவபெருமானுக்காக உருவாக்கப்பட்ட குடவரை கோயிலாகும் என்பதை கல்வெட்டின் மூலம் அறிய முடிகிறது. இயற்கையான பாறையிலேயே லிங்கம் வடிக்கப்பட்டு கருவறையும் அழகிய முன் மண்டபமும் கொண்டு விளங்குகிறது. மண்டபத்தின் முன்வரிசையில் மட்டும் இரண்டு தூண்களும், இரண்டு அரைத் தூண்களும் உள்ளன. இக் கோயிலை உள்ளூர் மக்கள் இடைச்சி மண்டபம் என சொல் வழக்கில் கூறிவருகின்றனர். வழிபாடு மேற்கொள்ளப் பட்டு வரும் இக்குடவரை கோயிலில் பக்தர்களால் ஆங்காங்கு எண்ணெய் தடவப்பட்டு மிகவும் பாதிப்பு அடைந்துள்ளது.



சிவன் கோயில், அரிட்டாபட்டி

அரசால் பதினோராவது நிதிக்குழு பரிந்துரையின் அடிப்படையில் அரசாணை எண். 283 தமிழ் வ.ப. (ம) அ.நி. துறை (அ.தொ.உ) நாள் 27-11-03 மூலம் ரூ. 2.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டதன் பேரில், ஒதுக்கப்பட்ட நிதியினைக் கொண்டு சில முன்னேற்றப் பணிகளும், பழுது நீக்கத்தினையும் மேற்கொள்ளும் வகையில், மத்திய தொல்லியல் துறையிலிருந்து ஓய்வு பெற்ற உதவிக் கண்காணிப்பு பொறியாளர் திரு. எம்.ஜி. செல்லப் பிள்ளை நியமனம் செய்யப்பட்டு பணிகள் அடையாளங் காணப்பட்டது.

**அடையாளங் காணப்பட்ட பணிகள் :**

* சமூக விரோதிகளால் பாதிப்பு ஏற்படுத்தா வண்ணம், பறவைகள் உட்புகா வண்ணம் மற்றும் வழிபாட்டுக்கு

இடையூறு நிகழா வண்ணம் மண்டபத்தின் மையப் பகுதியிலும் மற்றும் அதன் இரு மருங்கிலும் மூடி திறக்கும் வகையில் கதவு அமைப்பும், மீதமுள்ள இடத்தில் நிலையாகவும் உரிய வலை அமைப்பு பொருத்துதல்.

* பொதுமக்கள் இதன் வரலாற்றினை எளிதாக அறியும் வண்ணம் தகவல் பலகையும், அறிவிப்பு பலகையும் பொருத்துதல்.

* இக்கோயில் படிக்கட்டுகள் அதன் நிலைவிட்டு பெயர்ந்து காணப்பட்டதால் அதனைச் சீர்செய்தல்.

* ஏற்கனவே முட்கம்பி வேலியினை மாற்றி புதிய முட்கம்பி வேலி பொருத்துதல்

* வேலிக்குட்பட்ட பகுதிகளில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகளை சரி செய்தல்

* கீழ்ப்புற வேலிப்பகுதியிலிருந்து வெளிச் செல்ல ஏதுவாக கதவு அமைத்தல்

## மேற்கொள்ளப்பட்ட பணிகள் :

* கோயிலின் முன்பகுதியில் அணுகுசாலை அமைக்கப் பட்டது.

* ஏற்கனவே குறிப்பிட்டதைபோன்று கம்பி வலை அமைப்பு உரிய கதவுகளுடன் பொருத்தப்பட்டது.

* சிலைகள் மற்றும் குடைவரைக் கோயிலில் இருந்த எண்ணெய்க் கசிவு உரிய இரசாயன முறையில் அகற்றப்பட்டது.

* இரும்பு கம்பங்களுக்கு வண்ணம் அடிக்கப்பட்டது.

* செங்குத்தாக காணப்பட்ட பாறைப் பகுதிகளில் கைப்பிடி அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

* எனாமல் தகவல் மற்றும் அறிவிப்பு பலகைகள் பொருத்தப்பட்டது.

வரலாற்று சிறப்பு மிக்கதும், ஊருக்கு வெளியே நடமாட்டம் இல்லாத பகுதியில் அமைந்துள்ளதுமான இச் சின்னத்தினை மேலும் பல நூற்றாண்டுகள் அழியா வண்ணம் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

★ ★ ★

## காஞ்சிபுரம் மாவட்டம், திருபெரும்புத்தூர் வட்டம், சிவக்கொழுந்தீஸ்வரர் கோயில் - சிவன்கூடல்

காஞ்சிபுரம் மாவட்டம், திருபெரும்புத்தூர் வட்டம், சிவன்கூடல் கிராமத்தில் உள்ள சிவக் கொழுந்தீஸ்வரர் கோயில் இத்துறையின் பாதுகாக்கப் பட்ட சின்னமாகும். தொன்மையான நினைவுச் சின்னங்கள், தொல்லியல் இடங்கள் மற்றும் எச்சங்கள் சட்டம் 1966 (சட்ட எண். 25/1966)-ன்படி அரசாணை எண். 1314/ கல்வித் துறை / நாள் 14.7.1983 மூலம் தொல்லியல் பாதுகாக்கப்பட்ட சின்னமாக அறிவிக்கப் பட்டு இத்துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

வரலாற்று முக்கியத்துவம் :

சோழர்காலந் தொடங்கி தொன்மைமிக்க இவ் வூரில் உள்ள இறைவன் சிவக்கொழுந்தாண்டார், சிவக்கொழுந்தீஸ்வரர் என அழைக்கப்படுகிறார். இங்குள்ள கல்வெட்டுகள் முதலாம் இராஜேந்திர சோழன், முதலாம் குலோத்துங்கன் மற்றும் விக்கிரம சோழன் காலத்தைச் சார்ந்ததாகும். விக்கிரம சோழன்

காலத்தில் விமானம் புதுப்பிக்கப்பட்டு உள்ளது. 13-ம் நூற்றாண்டில் மரகதவல்லி நாச்சியார் என்ற அம்மன் ஆலயம் விஜயகண்டகோபாலன் என்ற அரசனால் கொடை அளித்து கட்டப்பட்டுள்ளது என்பதையும் அறிய முடிகிறது.

தற்போதைய நிலை :

கோயில் கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம் ஆகியன கொண்டதாக இக்கோயில் உள்ளது. விமானம் இருந்தமைக்கான சான்றுகள் எதுவும் தென்படவில்லை. மகாமண்டபத்தில் மேற்கூரையில் பாவுக்கல் காணப்படவில்லை. இதனால் அதிக அளவு இடைவெளி உள்ளது. பிரதான கோயிலின் அணுகு பாதை சிமெண்ட் கான்கிரீட் கொண்டு காணப்படு கிறது. மேற்கூரையின் மேல் சுண்ணாம்பு கான்கிரீட் போடப்பட்டமைக்கான அறிகுறிகள் காணப்பட வில்லை. பலதரப்பட்ட செடிகள் வளர்ந்து காணப்படு கிறது. மகாமண்டபத்தில் இரண்டு தூண்கள் அதன் நிலைவிட்டு விலகி காணப்படுகிறது. பலவகைப்

பட்ட வரிகற்கள் கோயிலின் பாதுகாக்கப்பட்ட பகுதிக் குள் சிதறி காணப்படுகிறது. கோயில் தற்போது வழிபாட்டில் இருந்து வருகிறது.

அரசாணை எண். 283, த.வ.ப. (ம) அ.நி. (அதொ2) துறை அரசால் ஒப்பளிக்கப்பட்ட ரூ. 8.00 லட்சம் நிதியின் இக்கோயிலுக்கு உபயோகப்படுத்துவது தொடர்பாக மத்திய தொல்லியல் துறையைச் சேர்ந்த ஓய்வு பெற்ற உதவி கண்காணிப்பு தொல்லியல் பொறியாளர் திரு. எம்.ஜி. செல்லப்பிள்ளை அவர்களை நியமனம் செய்து பொதுப் பணித் துறைக்கு உதவ அறிவுறுத்தப்பட்டது.

**அடையாளம் காணப்பட்ட பணிகள் :**

- ☐ பாதுகாக்கப்பட்ட பகுதியின் உட்புறம் மற்றும் வெளிப்புறம் வளர்ந்து காணப்படும் பலதரப்பட்ட மரங்கள் மற்றும் செடி, கொடிகளை அழித்தல்.

- ☐ கோயிலின் தற்போதைய நிலையினை நிழற்படம் மூலமும், வரைபடம் மூலமும் பதிவு செய்து பிரிக்கப் பட வேண்டிய வரிக்கற்களின் எண்களை முறையாக இடுதல் வேண்டும். இப்பணிக்கு முன் அனுபவம் வாய்ந்த (ஸ்தபதியினை) சிற்பியினை உபயோகப் - படுத்திக் கொள்ள வேண்டும்.

- ஆங்காங்கே சிதறி கிடக்கும் வரிகற்களின் பாகங்களை ஒன்று சேர்த்து பணிகளுக்கு தேவைப்படும் இடங் களில் உபயோகப்படுத்திக் கொள்ளல்.

- வேலிக்கு உட்புறமும், வெளிப்புறமும் காணப்படும் உதிரி சிற்பங்களை அதன் உயரத்திற்கு ஏற்ற வகையில் கோயிலின் மேல்புறம் மேடை அமைத்து நிலை நிறுத்துதல்.

- கோயிலின் மேற்கூரையின் மேல் உடைத்த செங்கல் துண்டுகள் (ஜல்லி) மற்றும் சுண்ணாம்பு கொண்டு கான்கிரீட் போட்ட நிலையில் மழைநீர் எளிதாக வெளியேறும் வகையில் தட்டோடு போடுதல்.

- அர்த்த மண்டபத்தில் கருங்கல் பலகை கொண்டு தரையினை அமைத்து சுண்ணாம்பு சிமெண்ட் கலந்த கூட்டுக் கலவை காரையினைக் கொண்டு பதித்தல்.

- அர்த்த மண்டபத்தின் நுழைவு வாயிலில் கோயில்களில் பொருத்தப்படும் தோற்றம் போன்று கதவு அமைத்தல்.

- கோயிலின் முன்புறம் தற்போது உள்ள சிமெண்ட் தளத்தினை அகற்றி கருங்கல் பலகை கொண்டு மாற்றுதளம் அமைத்தல்.

- பக்தர்களால் தீபம் ஏற்றப்படுவதன் காரணமாக ஆங்காங்கு வரிக்கற்களின் மேல் எண்ணெய் சிதறி காணப்படுவதால் இரசாயன முறையில் சுத்தம் செய்யப்படுதல் வேண்டும்.

- வடகிழக்கு மூலையில் மணற்கற்களைக் கொண்டு கட்டப்பட்டுள்ள பரிவாரக் கோயிலில் செடிகள் வளர்ந்துள்ளபடியால் மிக சிதிலமடைந்து காணப் படுகிறது. ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி உரிய முறையில் எண்கள் இடப்பட்டும், நிழற்படங்கள் மூலம் பதிவு செய்தும் உரிய தாங்கு அமைப்புகள் மேற்கொண்ட நிலையில் மிகக் கவனமாக பிரித்து எடுத்து மீண்டும் அதன் தொன்மை தன்மை மாறாத வகையில் கட்டுமானம் மேற்கொள்ளல்.

- எல்லை வரம்புகளில் அமைக்கப்பட்டுள்ள கம்பி வேலி கம்பங்களுக்கு வண்ணம் அடித்தல்.

மேற்கொள்ளப்பட்ட பணிகள் :

- வேலியின் உட்புறம் மற்றும் வெளிப்புறம் ஆங்காங்கு சிதறிக் கிடந்த வரிக்கற்கள் சேகரிக்கப்பட்டது.

- பலதரப்பட்ட செடிகள் பிரதானக் கோயில் மற்றும் பரிவாரக் கோயிலிலிருந்து அகற்றப்பட்டது.

- நிலை விலகி காணப்பட்ட வரிக்கற்கள் தூண்கள் மற்றும் பாவுக் கற்கள் எண்களிடப்பட்டு, அகற்றப் பட்டு மீண்டும் நிலைநிறுத்தப்பட்டது.

- கருவறையின் நுழைவு வாயில் மேல்புறம் கீறல் விழுந்திருந்த தாங்கு கல் அகற்றப்பட்டு புதிதாக அடித்து பொருத்தப்பட்டது.

- மணல் கற்களைக் கொண்டு கட்டப்பட்டிருந்த பரிவாரக் கோயில் உரிய தாங்கு அமைப்பு ஏற்படுத்தப் பட்டு, எண்களிடப்பட்டு பிரிக்கப்பட்டது மீண்டும் அதே பாணியில் கட்டப்பட்டது.

- மகாமண்டபத்தின் மேற்கூரையில் காணப்பட்ட இடைவெளி, பாவுக்கற்கள் கொண்டு மூடப்பட்டது.

- கோயிலின் மேல்தளத்தில் இருந்த பழைய செங்கல் ஜல்லி மற்றும் சுண்ணாம்பு கான்கிரீட் அகற்றப்பட்டு புதிய கான்கிரீட் போடப்பட்டு ஓடு பாவப்பட்டது.

- மகாமண்டபத்தில் புதிய கருங்கல் பலகைத்தளம் அமைக்கப்பட்டது

- கதவு ஒன்று பிரதான நுழைவு வாயிலில் பொருத்தப் பட்டது.

சிறப்பு ஆணையர் அவர்களால் 6.8.2004 அன்று முகாம் மேற்கொண்டு பொதுப்பணித் துறையால் மேற் கொள்ளப்பட்ட பணிகள் ஆய்வு செய்யப்பட்டது. பணிகள் நடைபெறும்பொழுது கிடைத்த முருகன், பைரவர் மற்றும் தட்சிணாமூர்த்தி ஆகிய உதிரிச் சிற்பங்களை பாதுகாப்பாக மேடை கட்டி நிலைநிறுத்த அறிவுறுத்தப்பட்டது. இக் கோயிலில் கிடைத்த ஜேஷ்டா சிற்பத்தினை அதன் தொன்மை கருதியும், மணற்கல்லால் செய்யப்பட்டதாலும் துறையின் தொல்லியல் வேதியியல் பிரிவு மூலமாக பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளவும் கோயிலில் அறிவிப்பு பலகை வைக்கவும் அறிவுறுத்தப்பட்டது.

மேற்கண்ட நடவடிக்கையின் மூலமாக தொன்மை மிக்க சோழர் காலத்திய இக்கோயில் மேலும் புத்துயிர் பெற்று வருங்கால தலைமுறையினருக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

* * *

# மதுரை மாவட்டம்,
# ஆனைமலை, இலாடன் கோயில்

மதுரையிலிருந்து 8 கல் தொலைவில் அமைந்துள்ள யானை வடிவொத்த மலையான ஆனை மலையின் வடக்குச் சரிவில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த முற்கால பாண்டியர் கால குடவரைக் கோயில் தொல்லியல் துறையின் பாதுகாக்கப்பட்ட சின்னமாக தொன்மையான நினைவுச் சின்னங்கள் தொல்லியல் இடங்கள் மற்றும் எச்சங்கள் சட்டம் 1966-ன்படி அரசாணை எண். 23/ த.வ.ப. துறை / நாள் 12.2.93-ன் மூலம் அறிவிக்கப்பட்டு தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

## குடவரையின் அமைப்பு :

இக்குடவரையில் உள்ள முனிவர் சிற்பம் ஒன்றுக்கு லாட முனிவர் என்று பெயர் கொடுத்து இக்கோயிலை இலாடன் கோயில் என இப்பகுதி மக்கள் அழைத்து வந்ததால் இப்பெயர் நிலைத்து நின்றது. ஒரு சதுரமான சிறிய கருவறையும், நீள் சதுர முகமண்டபத்தையும் உடையது. முகமண்டபத்தில் இரு தூண்கள் உள்ளன.

பதினோராவது நிதிக்குழு பரிந்துரையின் பேரில் அரசால் ரூ. 2.32 இலட்சத் தொகை ஒப்பளிக்கப்பட்டு அரசாணை எண். 283 / தமிழ் வளர்ச்சி பண்பாடு (ம) அறநிலைய (அ.தொ.2) துறை / நாள் 27.11.2003-ன் மூலம் அறிவிக்கப்பட்டதன்படி பொதுப்பணித் துறை மூலமாக பணியினை மேற்கொள்ளும் பொருட்டு,



இலாடன் கோயில், ஆனைமலை - பணிக்கு பின்

தொல்லியல் கோட்பாடுகளின்படி உதவ மத்திய தொல்லியல் துறையிலிருந்து ஓய்வு பெற்ற உதவி கண்காணிப்பு தொல்லியல் பொறியாளர் திரு. எம்.ஜி. செல்லப்பிள்ளை அவர்களை அரசு நியமனம் செய்தது.

## அடையாளங்கண்ட பணிகள் :

* ஏற்கனவே பாதுகாக்கப்பட்ட பகுதியில் அமைக்கப் பெற்றுள்ள முட்கம்பிவேலி மற்றும் தாங்கு கம்பங்கள் ஆங்காங்கே இல்லாமையால் அதனை மாற்றி புதுப்பிக்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளல்.

* மண்டபத்தின் நுழைவாயிலில் பிரேம் அமைப்புடன் கூடிய வலைக்கதவு பொருத்துதல்

* அணுகு பாதையாக அதன் முன்புறம் 6.00 மீட்டர் அகலமுள்ள பாதை அமைத்தல்.

* குடவரைக் கோயிலில் காணப்படும் வெடிப்புகளை சீர் செய்தல்

* குடவரைக் கோயிலில் காணப்பட்ட தூசி, அழுக்கு மற்றும் சுண்ணாம்பு ஆகியவற்றை இரசாயன முறையில் அகற்றுதல்.

* ஆங்காங்கு வளர்ந்து காணப்பட்டட மரம், செடிகளை அகற்றுதல்.

## மேற்கொள்ளப்பட்ட பணிகள் :

* குடவரைக் கோயிலில் சமூக விரோதிகளால் எந்தவித பாதிப்பும் ஏற்படாவண்ணம் பாதுகாப்பு வலை

அமைத்திடவும், வெளவால் போன்ற பறவைகள் எச்சமிடா வண்ணம் பிரேமுடன் கூடிய வலை அமைப்பு பொருத்தப்பட்டது.

* சின்னத்தின் முன் பகுதியில் சாலை அமைக்கப்பட்டது.

* ஏற்கனவே இருந்த இடத்தில் புதிய கம்பங்கள் நடப்பட்டு வேலி அமைக்கும் பணி மேற்கொள்ளப் பட்டது.

* Vitreous எனாமல் அறிவிப்பு (ம) தகவல் பலகை பொருத்தப்பட்டது.

* எண்ணெய் பசை குடவரைப் பகுதியிலிருந்து இரசாயன முறையில் அகற்றப்பட்டு சுத்தம் செய்யப் பட்டது

* வேலி தாங்கு கம்பங்களுக்கு வண்ணம் அடித்தல்

* செங்குத்தான பகுதியில் கைப்பிடி அமைத்தல்

தமிழ்நாட்டிற்கு பெருமைத் தரத்தக்க வகையில் அமைந்துள்ள இக்குடவரை கோயில் மேற்படி பணி களினால் மங்காத பொலிவு அடைந்துள்ளது.

★ ★ ★

# விழுப்புரம் மாவட்டம்,
# திருக்கோயிலூர் வட்டம்,
# ஆலம்பாடி பாறையோவியம்

விழுப்புரம் மாவட்டம், திருக்கோயிலூர் வட்டத் தினைச் சேர்ந்த ஆலம்பாடி கிராமத்தில் உள்ள பாறை யோவியம் அதன் வரலாற்று முக்கியத்துவம் கருதி, தொன்மையான நினைவுச் சின்னங்கள், தொல்லியல் இடங்கள் (ம) எச்சங்கள் சட்டம் 1966-ன்படி பாதுகாக்கப் பட்ட சின்னமாக அரசாணை எண். 139 / தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறை நாள் 10.5.89-ன்படி அறிவிக்கப் பட்டதன் மூலம் தொல்லியல் துறையால் பாதுகாக்கப் பட்டு வருகிறது.

**வரலாற்று முக்கியத்துவம் :**

கல்லாங்குத்துப் பாறை என அழைக்கப்படும் இம் மலையின் இயற்கையான குடவரையில் விலங்கினங்கள் உருவங்கள் செங்காவி மற்றும் வெள்ளை நிறங்களில் ஓவியங்களாக தீட்டப்பட்டுள்ளன. மிகத் தொன்மையான பாறையோவியங்களில் இடம்பெறும் உள் உறுப்புகளைக் காட்டும் ஊடுகதிர் (X-ray) ஓவியங்கள் காணப்படு கின்றன. இதுவே தமிழ்நாட்டில் முதன் முதலில் கண்டறியப்பட்ட ஓவியமாகும்.



ஆலம்பாடி - பணிக்கு பின்



ஆலம்பாடி - பணிக்கு பின்

பாதுகாக்கப்பட்ட ஓவியம் (ம) அதன் பகுதியின் நிலை :

சுமார் 310 மீட்டர் சுற்றளவுடைய மலைக்குன்றில் இயற்கையாக அமையப்பெற்ற குடவரைப் பகுதியில் இவ்வோவியங்கள் அமையப் பெற்றுள்ளதால் இதன் முக்கியத்துவம் உணராத நிலையில் சில பார்வை யாளர்கள் அதன் மேல் சரி (ம) வண்ணங்களைக் கொண்டு எழுதியுள்ளனர். பாதுகாக்கப்பட்ட பகுதிக்குள் எந்தவித புதிய கட்டுமானமும் மேற்கொள்ளக்கூடாது என்ற சட்டம் அறியாத நிலையில் உள்ளூர் மக்களால் இம்மலையின் உச்சியினை எளிதாக அடையும் வகையில் கான்கிரீட் படிக்கட்டுத் தளம் அமைக்கப்பட்டு உச்சியில் சிறிய முருகன் கோயில் போன்ற அமைப்பை ஏற்படுத்தி உள்ளனர்.

அரசால் பதினோராவது நிதிக்குழு பரிந்துரை அடிப்படையில் அரசாணை எண். 73 த.வ.ப. (ம) அ.நி. (அ.தொ.2) துறை நாள் 16-05-2003 அரசால் ஒதுக்கப்பட்ட ரூ. 5.00 இலட்சம் நிதி ஆதாரத்தினைக் கொண்டு பொதுப்பணித் துறையினர் மூலமாக மேற்படி ஓவியத்தையும் பாதுகாக்கப்பட்ட நிலப்பரப்பில் ஆக்கிரமிப்பு எதுவும் மேற்கொள்ளாத நிலையில் நடவடிக்கை எடுக்குமுகமாக தொல்லியல் கலந்தறிதற்குரியர் திரு. எம்.ஜி. செல்லப் பிள்ளை இத்துறை மூலம் நியமனம் செய்யப்பட்டு பணிகள் அடையாளம் காணப்பட்டது.

அடையாளங் காணப்பட்ட பணிகள் :

- மலையினைச் சுற்றி உள்ள எல்லை வரம்பினை வருவாய் துறையின் மூலம் அடையாளங்கண்டு வேலி அமைத்தல்.

- மலையின் உச்சியில் குட்டைப் போல காணப்படும் நீர் தேக்கத்திலிருந்து தண்ணீர்க் கசிவு ஓவியத்தின் மீது விழும் நிலை ஏற்பட்டுள்ளதால், ஒரு துவார மிட்டு தண்ணீர்க் கசிவு வெளியேறும் பாதையை மாற்றுதல்.

- ஓவியங்கள் அதன் தொன்மை (ம) தட்பவெட்ப நிலையால் பாதிப்பு அடைந்துள்ளதால் உரிய இரசாயன பூச்சு, துறையின் இரசாயனர் முன்னிலை யில் அளித்தல்

- ஓவியத்தின் சிறப்புத் தன்மையை எளிதாக கண்டறியும் வண்ணம் பளபளப்பான (vitreous) எனாமல் தகவல் (ம) அறிவிப்பு பலகை பொருத்துதல்.

மேற்கொள்ளப்பட்ட பணிகள் :

- வருவாய் துறையினர் மூலம் எல்லையின் சுற்றளவு அளக்கப்பட்டு சர்வே கற்கள் நடப்பட்டது.

- பாதுகாக்கப்பட்ட பகுதியிலிருந்து ஓவியம் அமைந் துள்ள இடம் வரை எளிதாக செல்லும் வகையில் அணுகு பாதை அமைக்கப்பட்டது.

* எல்லை வரம்பினைச் சுற்றி 1' - 0'' X 2'' - 0'' அளவில் கான்கிரீட் சுவர் அமைத்து தாங்கு இரும்பு கம்பங்கள் பொருத்தப்பட்டு வலைவேலி அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

* துறையின் இரசாயனர் (ம) பாதுகாப்புப் பிரிவினர் உதவியுடன் பாறை ஓவியங்கள் இரசாயன முறையில் சுத்தம் செய்யப்பட்டு பாதுகாப்பு பூச்சு மேற்கொள்ளப் பட்டது.

இந்நிலையில் பணி மேற்கொள்ளுகையில் 1.10.2004 அன்று ஆய்வு மேற்கொண்ட சிறப்பு ஆணையர் திரு. தி.ஸ்ரீ. ஸ்ரீதர் அவர்களால் சில அறிவுரைகள் வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

* ஓவியங்கள் அமைந்துள்ள பாறையின் முன்புறம் உடைந்து காணப்படும் பாறையினை, ஓவியங்களை மறைக்காத நிலையில் தெளிவாக தெரியும் வண்ணம் செதுக்குதல்.

* பொதுமக்கள் எவரும் ஓவியத்தின் அருகில் செல்லாத வண்ணம் தடுப்பு ஏற்படுத்துதல்.

* தெற்கு பக்கம் அமைந்துள்ள ஏணி மூலம் சமூக விரோதிகள் ஏறி ஓவியங்களை சேதப்படுத்த வாய்ப்புகள் உள்ளதால் இதனை மறுபக்கத்தில் மாற்றி அமைத்தல்.

* பாறையின் மேலிருந்து தண்ணீர் வழிந்து ஓவியங்கள் மீதுபடாத வண்ணம் பாறையில் சிறிய கோடு போன்று செதுக்கிவிடுதல்

* அணுகுபாதையில் காணப்பட்ட குறைபாடுகளை சரிசெய்தல்.

மேற்கண்ட நிகழ்வினால் உலகின் தொன்மை கால பாறையோவியங்களுடன் இணைந்து பறைசாற்றிக் கொண்டிருக்கும் இப்பாறையோவியம் மேலும் புத்துயிர் பெற்றுள்ளது.

***

# ஆலம்பாடி மற்றும் செத்தவரை பாறை ஓவியங்கள் வேதியல் முறையில் பாதுகாத்தல்

11வது நிதிக் குழுவின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளில் ஒன்றான விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள ஆலம்பாடி மற்றும் செத்தவரை பாறை ஓவியங்கள் பாது காத்தல், பொதுப்பணித் துறையினரால் மேற்கொள்ளப் பட்டது. இப்பணிகளில் ஒரு பிரிவான வேதியல் முறையில் பாறை ஓவியங்களை பாதுகாத்தல் தொல்லியல் துறை இரசாயனரின் மேற்பார்வையில் மேற்கொள்ளப்பட்டது.

## பாறை ஓவியம் வரையும் முறை

வரலாற்றுக்கு முந்தைய காலங்களில் பாறையில் கரடு முரடான மேற்பரப்பின் மீது வண்ணம் தீட்டப் பட்டது, அதனால் வண்ணம் நன்றாக ஒட்டிக்கொண்டது. சிகப்பு, மஞ்சள் போன்ற வண்ணங்கள், இரும்புத் துகளி லிருந்து கிடைக்கப் பெற்றவை (ஹெமட்டை; லிம்மோ ஹைட்) வெள்ளை நிறத்திற்கு கேவோலின் அல்லது சுண்ணாம்பு கல் உபயோகிக்கப்பட்டது. கருப்பு நிறத்திற்கு கரி அல்லது மரங்களில் டை ஆக்ஸைடு கொண்டு வண்ணம் தீட்டப்பட்டது.

## ஆலம்பாடி மற்றும் கீழ்வாலை ஓவியங்களின் சுற்றுச் சூழ்நிலை

பாறை ஓவியங்கள் மலையின் மேற்பகுதியில் அமைந்து இருந்தாலும், அதன் சுற்றுப்புறம் தண்ணீர் கசிவால் கறைகள் ஏற்பட்டுள்ளது. காற்றில் உள்ள ஈரப் பதத்தால் காளான் போன்றவைகள் வளருகின்றன. மழைநீர் கசிவினால் பாறையில் உள்ள உப்புகள் வெளியேறுகின்றன. பாறை ஓவியங்களைப் பார்க்க வரும் பொதுமக்களும் பல விதத்திலும் தங்களது பெயர்களை எழுதிவைத்து ஓவியத் திற்கு ஊறுசெய்கின்றனர்.

## ஆலம்பாடி மற்றும் செத்தவரை பாறை ஓவியங்களின் நிலை

பாறை ஓவியங்களில் சிதைக்கு பல காரணங்கள், அவற்றில் முக்கியமானவை (1) தண்ணீர்க் கசிவு, (2) பாறை களில் உள்ள உப்பு வெளிவருதல், (3) வெப்பம் மற்றும் பொதுமக்களால் ஏற்படும் சிதைகள் எனலாம். இவற்றில் மிக முக்கியமானவை மழை நீர் கசிவினால் ஏற்படும் சிதைவு ஆகும். பாறை ஓவியங்கள் அமைந்துள்ள மலை களின் மேற்பகுதிகளில் உள்ள சுனைகளில் இருந்து நீண்ட காலத்திற்கு தண்ணீர் கசிவதினாலும் மற்றும் அங்கு உள்ள வெப்பத்தினாலும் பாறை ஓவியத்தின் வண்ணம் மங்கி விடுகின்றன. மேலும் காளான் உற்பத்திக்கும் வழி வகுக் கின்றது. பொதுமக்கள் கரியைக் கொண்டும், வண்ணங் களைக் கொண்டும் பாறை ஓவியத்தில் அவர்களின் பெயர்களையும் பதித்து வருகின்றனர்.

முடிவுரை :

4) வேதியல் முறையில் சுத்தம் செய்து பாதுகாப்பு பூச்சு யிட்ட பின்னர், சிகப்பு மற்றும் வெள்ளை வண்ணங்கள் தற்போது தெளிவாக உள்ளது. பாதுகாப்பு வேலியும் போடப் பட்டு மேற்கொண்டு பாறை ஓவியங்கள் அவ்வப்போது கண்காணிக்கப்பட்டு வருகின்றது. பொது மக்களின் ஆதரவு மிக முக்கியமாகும். எனவே இதுகுறித்து மக்க ளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த ஆசிரியர், மாணவர் கள், கல்லூரிப் பேராசிரியர்கள், வரலாற்று ஆர்வலர்கள் ஆகியோரின் உதவியும் எம் துறை தொல்லியல் அலுவலர் கள் மூலம் வேண்டப்படுகிறது.

## வேதியல் முறையில் பாறை ஓவியங்களை பாதுகாத்தல்

1) புஞ்சை, காளான் போன்ற செடிகளை 1% எக்ஸ்டிரான் மற்றும் அமோனியா கொண்டு அகற்றப்பட்டது.

2) மழை நீர் மற்றும் சுனைகளில் இருந்து ஏற்படும் கசிவு களை நிறுத்தும் பொருட்டு பாறையில் உள்ள விரிசல்கள் சரிசெய்யப்பட்டுள்ளன.

3) தூசி மற்றும் அழுக்கு ஆகியவை, ஏரிசாராவி, அசிடோன், டர்பன்டைன் போன்ற கரிம கரைப்பான்கள் கொண்டு அகற்றப்பட்டது. அழுத்தமான கரைகளை 1% எக்ஸ்டரான கரைசலை கொண்டு அகற்றப்பட்டது.

4) எண்ணெய் வண்ண கரைகளை கரிம கரைப்பான்கள் கொண்டு அகற்றப்பட்டது.

5) பாறைகளிலிருந்து அதன் மேற்பகுதிகளுக்கு கரைந்து வரும் உப்புகளை அமிலம் நீக்கப்பட்ட காகித மை ஒற்றுத் தாள் கொண்டு அகற்றப்பட்டது.

6) மேற்கூறிய அனைத்து கறைகளையும் உரிய முறையில் முழுமையாக ஆற்றிய பின்னர் மேலும் நன்றாக உலர்ந்து பின்னர் அசிடோன் கரைப்பானில் கரைக்கப் பட்ட 1% பாலிவினாயில் அசிடோன் பாதுகாப்பு பூச்சு தனை மென்மையான பிரஸ் கொண்டு பாதுகாப்பு பூச்சுயிடப்பட்டது.

★ ★ ★

## சின்னங்களில் உள்ள கல்வெட்டுகள்

### மடம், தாடகபுரீஸ்வரர் கோயில் முன்மண்டப வடசுவரில் உள்ள கல்வெட்டு

1) ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபுவன சக்ரவர்த்திகள் ஸ்ரீராஜராஜ தேவற்கு யாண்டு 4 ஆவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்துப் பல்குன்றக் கோட்டத்து தென்னாற்றூர்

2) நாட்டுக் குளத்தூற் திருவந்தீஸ்வரமுடைய மஹா தேவற்கு செங்கேணி அம்மையப்பன் அத்திமல்லனான ராஜேந்திர சோழச் சம்புவராயநேன் இ தேவற்கு தி

3) ருச்சாந்தாடலுக்கு குறைவறுப்புக்கு நான் கொண்டு விட்ட நிலம் மாணிக்கமங்கலத்துப் பிறிந்த பிடாரன் ஏந்தலான திருச்சிற்ற

4) ம்பல விளாகம் கீழ்பாற்கெல்லை கோதண்டபுரத்து எல்லைக்கும் மழுவூரெல்லைக்கு மேற்கும் தென்பாற் கெல்லைப் பந்தமங்க

5) லத்து எல்லைக்கு வடக்கும் மேற்பாற்கெல்லை ஏந்தல் எதிர் வாய்க் கல்லாலிப் பாறைக்கும் திருவிண்ணகர் நின்றான் ஏந்த

6) ல் கரைக்கு கிழக்கும் வடபாற்கெல்லை மாணிக்கமங்க லத்துக் கழநிக்குத் தெற்கில் கொல்லைக்குத் தெற்கில் வட்ட கேணிக்கும்

7) தென் கிழக்கில் ஆலங் கொல்லை வடக்கில் பெரிய கல்லுக்கும் ..... இந்நாற்பாற் கெல்லைக்குழுட்பட்ட புந்செய் நன்செய் வி தெற்கும்

குறிப்பு:

மூன்றாம் இராஜராஜசோழனின் 4ஆவது ஆண்டில் (கி.பி. 1220) அவனின் கீழ் சிற்றரசனாக இருந்த அத்திமல்லன் என்ற இராசேந்திர சோழ சம்புவராயன் குளத்தூர் திருவந்தீஸ்வர முடைய இறைவனுக்கு நறுமணச் சாந்து பூசி அபிசேகம் செய்வதற்காக நிலம் கொடுத்ததை இக்கல்வெட்டு குறிப் பிடுகிறது. நிலம் திருச்சிற்றம்பல விளாகம் என்ற பெயரில் விளங்கியது.





மடம், தாடகபுரீஸ்வரர் கோயில் முன்மண்டப வட சுவரில் உள்ள கல்வெட்டு.

## மடம், தாடகபுரீஸ்வரர் கோயில் முன்மண்டபத் தென்சுவரில் உள்ள கல்வெட்டு

1) ஸகலலோக சக்ரவத்தி இராஜநாராயணன் உடையார் குளந்தையாண்டார் கோயில் தானத்தார்க்கு

2) தங்கள் கோயில் ஆட் கண்காணி புவநேகவாகு தேவர் மகன் அழகிய திருச்சிற்றம்பலம் உடையார்

3) ஐயனுக்கு வாய்த்த புவநேகவாகு தேவர்க்கு ஆறாவது ஆடி மாதம் முதல் சந்த்ராதித்த வரையும்

4) காணி ஆகக் குடுத்தோம் இன்னாள் முதல் இப்படி செய்வதே உ

குறிப்பு:

குளந்தையாண்டார் கோயிற் பணி ஆட்களைக் கண்காணிக்க அழகிய திருச்சிற்றம்பலமுடையான் என்பவனை இராஜநாராயணச் சம்புவராயர் (கி.பி. 1337-62) நியமித்து அவனுக்குரிய காணி உரிமையை (நிலம்) கோயில் நிர்வாகிகளிடம் கொடுத்த செய்தி இக்கல்வெட்டில் சொல்லப்படுகிறது.



மடம், தாடகபுரீஸ்வரர் கோயில் முன்மண்டபத் தென் சுவர் கல்வெட்டு.

## இடையார்பாக்கம், மகாதேவர் கோயில் கருவறை வடசுவர் பட்டிகைக் கல்வெட்டு

1) ஸ்வஸ்திஸ்ரீ புகழ் மாது விளங்கச் சயமாது விரும்ப நிலமகள் நிலவ மலர் மகள் புணர உரிமையிற் சிறத்த மணிமுடி சூடி மீநவர் நிலை கெட வில்லவர் குலைதர ஏனை மந்நவர் ரிறியலுற் றிழிதர திக்கனைத்துந் சக்கர

2) நடாத்தி வீரஸிங்காஸநத்து அவநி முழுதுடை யாளொடும் வீற்றிருந்தருளிய கோராஜகேஸரி பந்மரான சக்ரவத்திகள் ஸ்ரீ குலோத்து சோழ தேவற்க்கு யாண்டு 17 ஆவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து மணவிற்

3) கோட்டத்துப் புரிசை நாட்டுப் புரிசைத் திரு.... டக்காடுடைய மஹாதேவற்கு இம்மண்டலத்து ஏயிற் கோட்டத்துக் கோநேரி நாட்டுக் கோநேரியில் அரசூர் கிழவந் வேளாந் மதுராந்தகன் வைத்த திரு[ந]ந்தா விளக்கு ஒந்றுக்கு

4) விட்ட ஆடு 95 இவ்வாடு தொண்ணூற்றைஞ்சும் சாவா மூவா பேராடாக இத்தேவர் சுரபி இடையந் பங்கி புஞ்சியேந் கைக்கொண்டு இத்தேவர் பண்டா ரத்தே நிசதம் உழக்கு நெய் நானும் எந் வற்கற்தாரும் அ

5) ளக்க கடவோமாகவு மிது முட்டில் முட்டிரட்டி நெய் யளக் கக் கடவேநாகச் சம்மதித்தாடு தொண்ணூற்றைஞ் சுங் கைக்கொண்டு சந்திராதித்த உள்ளவும் அளக்கக் கடவேநாநேந் பங்கி புஞ்சி[யேந்] இது சிலாலேகை

6) செய்வித்தேந் பெருமாள் திருவாய்மொழிந்தருள எழுதி திருக்கற்றளி எடுப்பித்த சந்திர சேகரந் இரவியாந சோளேந்திர சிங்க ஆசாரியநேந் இவை எந் எழுத்து இத் தந்மத்தை செலுத்தாதே விள.... நிந்றார்

7) கங்கையிடை குமரியிடை செய்தார் செய்த பாவத்துப் படு வார் இது பந்மாஹேச்வர ரக்சை ஸ்ரீ

குறிப்பு:

மெய்க்கீர்த்தியுடன் உள்ள இக்கல்வெட்டு முதலாம் குலோத்துங்க சோழனின் 17ஆவது ஆட்சி ஆண்டுக் (கி.பி. 1087) கல்வெட்டாகும். அரசூர் கிழவர் மதுராந்தகன் 95 ஆடுகளைக் கோயில் கருவூலத்தில் கொடுத்துள்ளான். அவற்றை இடையன் பங்கிபுஞ்சி என்பவன் பெற்றுக் கொண்டு ஒரு நந்தா விளக்கிற்கு நெய் அளக்கச் சம்மதித்துள்ளான்.



இடையார்பாக்கம், மகாதேவர் கோயில் கருவறை வடசுவர் பட்டிகைக் கல்வெட்டு.

# சிவபுரம், சிவன் கோயில் அர்த்த மண்டபச் சுவர்க் கல்வெட்டு

1) ஸ்வஸ்திஸ்ரீ கோறசடபன்மர் திரபுவனச் சக்கர வத்திகள் ஸ்ரீசுந்தர பாண்டிய தேவற்கு [யாண்டு] 15 வ

2) து ஜயங்கொண்ட சோழமண்டலத்து மணவிற் கோட்டத்து புரிசை நாட்டு ஊரோடகத்து ஸ்ரீ இராஜ

3) ராஜீசுரமுடைய மாதே[வ]ற்கு கூவமான தியாகசமுத்திர நல்லூர் இருங்கணூர் கிழவன் வாசுதேவன் [திரா]

4) னை விழுப்பரையர் பெண் பி[ள்]ளை ஆறைச்சியார் வைத்த சந்தி விளக்கு 1 விளக்கு ஒன்றும் இக்கோஇல் சிவப்

5) பிராமணர் காசிப கோத்திரத்து உருத்திர பட்டனும் கவுசிக கோத்திரத்து ஆளவந்தான் பட்டனும் இவ[ர்]

6) பக்கல் கைக்கொண்ட பணம் 9 இப்பணம் ஒன்பதும் கைக்கொண்டு சந்திராதித்தவரை திருமுன்பே திருவிளக்கு

7) எரிக்ககடவோமாக சம்மதித்தோம் உருத்திரபட்டனும் ஆளவந்தான் பட்டனும் இவ்வி

8) ருவோம் இது ஸ்ரீ மாகேச்வர ரக்சை

குறிப்பு:

இக்கல்வெட்டில் சிவபுரம், ஊரோடகம் என்று குறிக்கப்படுகிறது. கூவத்தைச் சேர்ந்த வாசுதேவன் என்பவனின் பெண் பிள்ளை (மனைவி) ஆறைச்சி என்பவள் சந்தி விளக்கிற்காக 9 பணம் கொடுக்க அதனை இக்கோயில் சிவபிராமணர் இருவர் பெற்றுக் கொண்டு விளக்கெரிக்க ஒப்புக் கொண்டமை இக்கல்வெட்டில் சொல்லப்படுகிறது. கல்வெட்டு கி.பி. 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சுந்தர பாண்டியன் காலத்தியதாகும்.

சிவபுரம், சிவன் கோயில் அர்த்த மண்டபச் சுவர்க் கல்வெட்டு

## கூரம், சிவன் கோயில் அர்த்தமண்டபத் தூண் கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீ
2. கோராஜ கே
3. ஸரி வர்மற்கு
4. யாண்டிருபத்
5. தேழாவது ஊ
6. த்துக்காட்டுக் கோட்ட
7. த்து நீர்வேளூர் நாட்டு
8. கூரத்து ஸபையோம்
9. எம்மூர்த் தட்டான்ஸ்ரீ...
10. க்கு.. ங்க வைத்த பொ
11. ந் தட்டான் பக்கல் பொ
12. ன் கொண்டு இவ்வூர் பெரு
13. ந்திருக் கோயில் மாதே
14. வர்க்கு நந்தா விளக்கு
15. இரவும் பகலும் எரிப்
16. பதற்கு நிசதி உழக்கெண்
17. ணை அட்டுவோமானோம்
18. அவ்வாண்டு[களில்] ஸ
19. ம்வத்ஸர வாரியம் செய்வா
20. ர்கள்ளட்ட கடவார் விக்கன[ஞ்]
    செய்தான்]
21. [க]ங்கையிடை குமரி
22. யிடை செய்தான் செய்த
23. பாவம் படுவாநாக பணி
24. த்தோம் ஸபையோம்
25. இது குறி இருந்து ப[ணி]
26. எழுதினேன் இவ்வூ
27. ர் மத்யஸ்த்தன் ஸ்ரீகாளி
28. ஏழாயிரவனேன்

கூரம் அர்த்த மண்டபத்தூண் கல்வெட்டு.

குறிப்பு:

இக்கல்வெட்டு கோராஜகேசரி என்ற பட்டமுடைய ஆதித்த சோழன் (கி.பி. 871-907) காலத்தியதாக இருக்க வேண்டும். கூரத்துச் சபையார் அவ்வூர்த் தட்டானுக்குப் பொன் கொடுக்க, அவன் அப்பொன்னை சபையாரிடம் கொடுத்து அதன் வட்டி வருவாய் மூலம் கோயிலில் ஒரு விளக்கு எரியச் செய்தமையை இக்கல்வெட்டு சொல்கிறது. இவ்வூர் மத்யஸ்தன் இக்கொடையை ஆவணமாக எழுதியுள்ளான். இறைவன் பெயர் பெருந்திருக் கோயில் மகாதேவர் என்று சொல்லப்படுகிறது.

# திருப்பருத்திக்குன்றம், சந்திரபிரபா கோயில் மடப்பள்ளித் தென்சுவர்க் கல்வெட்டு

1) ஸ்வஸ்திஸ்ரீ ராஜராஜ தேவற்கு யாண்டு 20 ஆ
2) வது தியாக சமுத்திரப்பட்டையார்க்கு அ
3) டைக்காயமுது குடுகிற பிராமணந் வீமவ
4) டுகன் நெந்மலி மருத்தல் ஏத்த கடமை இ
5) ந்த நாயனார்க்கு திருப்பள்ளி எழுச்சித் திருவ
6) மிதுக்கு விட்டான் இந்த நெல்லிட்டு இந்த மண்
7) டபஞ் செய்வித்தான்

குறிப்பு:

மூன்றாம் இராஜராஜசோழனுடைய 20 ஆம் ஆண்டுக் (கி.பி. 1236) கல்வெட்டு. தியாக சமுத்திரப் பட்டையார் என்ற சிற்றரசனுக்கு வெற்றிலைப்பாக்கு மடித்துக் கொடுக்கும் வீமன் வடுகன் என்பவன், இக்கோயில் இறைவனின் அதிகாலைப் பூசையின் போது படைக்கும் படையலுக்காக நெல்மலி ஏத்தம் என்ற நிலத்தின் வரி வருவாயைக் கொடுத்த செய்தி சொல்லப் படுகிறது.

திருப்பருத்திக்குன்றம் சந்திரபிரபா கோயில் மடப்பள்ளித் தென்சுவர்க் கல்வெட்டு

# சிவபுரம், மகாதேவர் கோயில்
# அர்த்தமண்டபத் தென் சுவர்க் கல்வெட்டு

1) ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடபன்மர் திருபு[வ]னச் சக்கர வர்த்திகள் ஸ்ரீசுந்தர பாண்டிய தேவற் யாண்டு 15 வது

2) ஜயங்கொண்ட சோழ மண்டலத்து மணவிற் கோட்டத்து புரிசை நாட்டு உரோடகத்து ஸ்ரீஇராஜ ராஜீசுரமுடைய

3) ய மாஹா தேவற்கு இவ்வூர் மாத்தூர் [கி]ழவன் வடுகன் இரா விழுப்பரையன் பெண் பி[ள்]ளை உடையாண்டை வைத்த சந்

4) தி விளக்கு க இ விளக்கு ஒன்றும் இக் கோஇல் சிவப் பிராமணர் காசிப கோத்தரத்து உருத்திராப்பட்டனும் கவிசிக கோ

5) த்திரத்து ஆளவந்தான் பட்டனும் கை[கொ]ண்ட பணம் 9 இப்ப[ண]ம்ஒன்பதும் கைக்கொண்டு சந்திராதித்த வரை சந்தி

6) விளக்கு திருமுன்பே திருவிளக்கு எரிக்க கடவோம் உருத்திர பட்டனும் ஆளவந்தான் பட்டனும் இவ்விருவோ

7) ம் இது ஸ்ரீ மாஹேசுர இ[ர]க்ஷை

குறிப்பு:

பாண்டிய மன்னன் சுந்தர பாண்டியனின் ஆட்சியில் (கி.பி. 13 ஆம் நூற்றாண்டு) மாத்தூர் கிழவன் வடுகன் விழுப்பரை யனின் மனைவி உடையாண்டை என்பவள் விளக்கெரிப் பதற்காக 9 பணம் கொடுக்க அதனைக் கோயில் சிவபிராமணர் இருவர் பெற்றுக் கொண்டு விளக்கெரிக்கச் சம்மதித்ததை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது.



சிவபுரம் மகாதேவர் கோயில் அர்த்த மண்டபத் தென் சுவர்க் கல்வெட்டு.

## கூரம், சிவன் கோயில் அர்த்தமண்படத் தூண் கல்வெட்டு

1) ஸ்வஸ்திஸ்ரீ நந்தி
2) வர்ம்ம மஹாராஜ
3) ந்நெழுத்து ஊற்
4) றுக்காட்டுக் கோட்
5) டத்துக் கூரத்
6) து ஸபையார்
7) காண்க தம்மூ
8) ர் அக்கலநிம்மடி
9) மா போற்றிப் பட்டி
10) ஆயின ஆறுப
11) ட்டி நிலமும் மு
12) [ன்பு] பெற்[ றாரை] மாற்றி
13) [யாண்டு இருப ]
14) த்து...
15) .....
16) மாஹாதேவற்கு
17) அர்ச்சநா போக
18) [ மாக ]க் காளன் அர்ச்சி
19) த்துண்பாணாகக் கா
20) [ளனுக்]குப் பணி
21) த்தலுட்டாங் கண்
22) டருள திருக்கோயி
23) லுட் பட்டார திருவ[ டி]
24) க் கீழே சிலாலேகை
25) செய்து குடுக்க இ[றை]
26) நீக்கி

குறிப்பு:

பல்லவ மன்னன் நந்திவர்மன் கூரத்துச் சபையார்க்கு விடுத்த ஆணையை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. அவனது அரசி அக்கலநிம்மடி பெயரால் உண்டாக்கப்பட்ட 6 பட்டி நிலத்தில் உழும் உரிமை பெற்றிருந்தவர்களை நீக்கி அதனைக் கோயிலின் அர்ச்சனை நிலமாக மாற்றி கொடுக்கும்படியும் இவ்வாணையைக் கல்வெட்டாக வெட்டும்படியும் சொல்லப் பட்டுள்ளது.



கூரம் அர்த்த மண்டபத் தூணில் உள்ள நந்திவர்மன் கல்வெட்டு

## திருப்பருத்திக்குன்றம், சந்திரபிரபா கோயில் மடப்பள்ளித் தென்சுவர்க் கல்வெட்டு

1. ஸ்வஸ்தி ஸ்ரீ ராஜராஜ தேவற்க்கு யாண்டு 20 ஆ
2. வது தியாக சமுத்திரப்பட்டையார்க்கு அ
3. டைக்காயமுது குடுகிற பிராமணந் வீமவ
4. டுகன் நெந்மலி மருத்தல் ஏத்தகடமை இ
5. ந்த நாயனாரக்கு திருப்பள்ளி எழுச்சித் திருவ
6. மிதுக்கு விட்டான் இந்த நெல்லிட்டு இந்த மண்
7. டபஞ் செய்வித்தான்

# சிவபுரம் மகாதேவர் கோயில் அர்த்தமண்டப தென் சுவர்க் கல்வெட்டு

1) ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடன்பமர் திருபு(வ)னச்சக்கரவர்த்திகள் ஸ்ரீசுந்தர
பாண்டிய தேவற் யாண்டு 15 வது

2) ஜயங்கொண்ட சோழ மண்டலத்து மணவிற் கோட்டத்து புரிசை நாட்டு
உரோகத்து ஸ்ரீஇராஜாராஜீசுரமுடைய

3) ய மாஹா தேவற்கு இவ்வூர் மாத்தூர்(கி)ழவன் வடுகன் இரா
விழுப்பரையன் பெண் பி(ள்)ளை உடையாண்டை வைத்த சந்

4) தி விளக்கு / இ விளக்கு ஒன்று இக் கோஇல் சிவப்பிராமணர்
காசிப கோத்தரத்து உருத்திராப்பட்டனும் கவிசிக கோ

5) த்திரத்து ஆளவந்தான் பட்டனும் கை(கொ)ண்ட பணம் 9 இப்ப(ண)ம்
ஒன்பதும் கைக்கொண்டு சந்திராதித்தவரை சந்தி

6) விளக்கு திருமுன்பே திருவிளக்கு எரிக்க கடவோம் உருத்திர பட்டனும்
ஆளவந்தான் பட்டனும் இவ்விருவோ

7) ம் இது ஸ்ரீ மாஹேசுர இ(ர)க்ஷை

# வரலாற்றுச் சின்னங்கள் பட்டியல்

## தொல்லியல் துறையின் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள்

| வ. எண் | மாவட்டம் | சின்னங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | 12 |
| 2. | திருவள்ளூர் | 1 |
| 3. | வேலூர் | 5 |
| 4. | திருவண்ணாமலை | 5 |
| 5. | விழுப்புரம் | 10 |
| 6. | கடலூர் | 2 |
| 7. | சேலம் | 1 |
| 8. | கோயம்புத்தூர் | 1 |
| 9. | தர்மபுரி | 3 |
| 10. | திருச்சிராப்பள்ளி | 7 |
| 11. | பெரம்பலூர் | 3 |
| 12. | கரூர் | 2 |
| 13. | நாகப்பட்டினம் | 2 |
| 14. | தஞ்சாவூர் | 4 |
| 15. | மதுரை | 16 |
| 16. | திண்டுக்கல் | 2 |
| 17. | இராமநாதபுரம் | 2 |
| 18. | சிவகங்கை | 1 |
| 19. | தூத்துக்குடி | 4 |
| 20. | திருநெல்வேலி | 3 |
| 21. | கன்னியாகுமரி | 1 |
| 22. | சென்னை | 1 |
| | மொத்தம் | 88 |

# பாதுகாக்கப்பட்ட சின்னங்கள்

| வ. எண். | சின்னத்தின் பெயர் | வட்டம் | மாவட்டம் |
|---|---|---|---|
| கோயில்கள் | | | |
| 1. | சிவன்கோயில், சிவபுரம் | திருபெரும்புதூர் | காஞ்சிபுரம் |
| 2. | மகாதேவர் கோயில், இடையார்பாக்கம் | திருபெரும்புதூர் | காஞ்சிபுரம் |
| 3. | சிவன்கோயில், சிவன்கூடல் | திருபெரும்புதூர் | காஞ்சிபுரம் |
| 4. | விட்டல் கோயில், விட்டலாபுரம் | திருக்கழுக்குன்றம் | காஞ்சிபுரம் |
| 5. | திருலோகியநாத ஜீனசுவாமி கோயில் (ஜைன) , திருப்பருத்திக்குன்றம் | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் |
| 6. | சொக்கீஸ்வரர் கோயில், காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் |
| 7. | சிவன் கோயில், கூரம் | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் |
| 8. | சந்திரபிரபா கோயில் (ஜைன), திருப்பருத்திக்குன்றம் | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் |
| 9. | விசாலீஸ்வரர் கோயில், விளக்கனாம்பூண்டி | பள்ளிப்பட்டு | திருவள்ளூர் |
| 10. | வாலீஸ்வரர் கோயில், தக்கோலம் | அரக்கோணம் | வேலூர் |

| வ. எண். | சின்னத்தின் பெயர் | வட்டம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 11. | தடாகபுரீஸ்வரர் கோயில், மடம் | வந்தவாசி | திருவண்ணாமலை |
| 12. | பூண்டி அருகர் கோயில்-(ஜைன), இரும்பேடு | ஆரணி | ,, |
| 13. | கங்கை கொண்ட - சோழீஸ்வரர் கோயில், கூழம்பந்தல் | செய்யாறு | ,, |
| 14. | சிவன்கோயில், கண்டமங்கலம் | விழுப்புரம் | விழுப்புரம் |
| 15. | முக்தியாலீஸ்வரர் கோயில் சீதா குகை, பெருமுக்கல் | திண்டிவனம் | விழுப்புரம் |
| 16. | திருமூலநாதர் கோயில், பேரங்கியூர் | உளுந்தூர்-பேட்டை | விழுப்புரம் |
| 17. | சிவன் கோயில், உலகாபுரம் | வானூர் | ,, |
| 18. | விஷ்ணு கோயில், உலகாபுரம் | வானூர் | ,, |
| 19. | ருத்ராபதி கோயில், கீழ்க்கடம்பூர் | சிதம்பரம் | கடலூர் |
| 20. | கடம்பவனேஸ்வரர் கோயில், எரும்பூர் | சிதம்பரம் | கடலூர் |
| 21. | இராமசுவாமி - கிருஷ்ணசாமி கோயில் | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி |
| 22. | சிவன் கோயில், ஆலம்பாக்கம் | லால்குடி | திருச்சிராப்பள்ளி |

| வ. எண். | சின்னத்தின் பெயர் | வட்டம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 23. | சிவன் கோயில், அழகியமணவாளம் | லால்குடி | திருச்சிராப்பள்ளி |
| 24. | பாச்சில் அமலீஸ்வரம் கோயில், அழகியமணவாளம் | லால்குடி | திருச்சிராப்பள்ளி |
| 25. | அகஸ்தீஸ்வரர் கோயில், பெருங்குடி | திருச்சிராப்-பள்ளி | திருச்சிராப்பள்ளி |
| 26. | சிவன் கோயில், பழூர் | ,, | ,, |
| 27. | கைலாயமுடையார் சிவன் கோயில், சோழமாதேவி | திருவெறும்-பூர் | ,, |
| 28. | இரட்டைக் கோயில், கீழையூர் | அரியலூர் | பெரம்பலூர் |
| 29. | சடையார் கோயில், திருச்சினாம்பூண்டி | தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| 30. | இலாடன் கோயில் (ஜைன), ஆனைமலை | மதுரை | மதுரை |
| 31. | கல்வெட்டு படுக்கைகள், முருகன் கோயில், வரிச்சியூர் | மதுரை | மதுரை |
| 32. | அஸ்தகிரீஸ்வரர் கோயில், வரிச்சியூர் | மதுரை | மதுரை |
| 33. | உதயகிரீஸ்வரர் கோயில், வரிச்சியூர் | மதுரை | மதுரை |

| வ. எண். | சின்னத்தின் பெயர் | வட்டம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 34. | சிவன் கோயில், அரிட்டாப்பட்டி | மேலூர் | ” |
| 35. | சிவன் கோயில், அய்யாப்பட்டி | ” | ” |
| 36. | வெட்டுவான் கோயில் (ஜைன), கழுகுமலை | கோவில் - பட்டி | தூத்துக்குடி |
| 37. | திருநீலகண்டன் கோயில், பனஞ்சாடி | அம்பாசமுத்- திரம் | திருநெல்வேலி |

சத்திரம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பிள்ளைச்சத்திரம், செல்வழிமங்களம் | திருப்பெரும் புதூர் | காஞ்சிபுரம் |
| 2. | வழிப்போக்கர் மண்டபம், தாங்கி | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் |
| 3. | திருமலை நாயக்கர் மண்டபம், அழகர்கோயில் | மேலூர் | மதுரை |

கல்லறை

| | | | |
|---|---|---|---|
| 1. | கஞ்சா சாகிப் கல்லறை, சோளிங்கர் | வாலாஜா பேட்டை | வேலூர் |
| 2. | டச்சுக் கல்லறைகள், நாகப்பட்டினம் | நாகப்பட் - டினம் | நாகப்பட்டினம் |
| 3. | பிரிட்டிஷ் கல்லறைகள் (44), பாஞ்சாலங்குறிச்சி | ஒட்டப்பிடாரம் | தூத்துக்குடி |
| 4. | பிரிட்டிஷ் கல்லறைகள் (5), | ஒட்டப்பிடாரம் | தூத்துக்குடி |

| வ. எண். | சின்னத்தின் பெயர் | வட்டம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 5. | கண்டி மன்னர் கல்லறை, வேலூர் | வேலூர் | வேலூர் |
| **குளம்** | | | |
| 1. | சின்னையன்குளம், சின்னையன்பேட்டை | செங்கம் | திருவண்ணா-மலை |
| 2. | ஸ்வஸ்திகா கிணறு, திருவெள்ளறை | லால்குடி | திருச்சிராப்பள்ளி |
| **அரண்மனை** | | | |
| 1. | தஞ்சாவூர் அரண்மனை, தஞ்சாவூர் | தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| 2. | திருமலை நாயக்கர் அரண்மனை, மதுரை | மதுரை | மதுரை |
| 3. | இராமலிங்க விலாசம், சூரன்கோட்டை | இராமநாதபுரம் | இராமநாதபுரம் |
| **கல்வெட்டு** | | | |
| 1. | சுனை மற்றும் பழந்தமிழ் கல்வெட்டு, அம்மன்கோயில்பட்டி | ஓமலூர் | சேலம் |
| 2. | கல்வெட்டு (ம) கல் படுக்கை, வேலாயுதம்பாளையம் | கரூர் | கரூர் |
| 3. | பிராமி கல்வெட்டுகள், ஆனைமலை | மதுரை | மதுரை |

| வ. எண். | சின்னத்தின் பெயர் | வட்டம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 4. | பிராமி கல்வெட்டு, கொங்கர்புளியங்குளம் | திருமங்கலம் | மதுரை |
| 5. | ஒவாமலை கல்வெட்டு, மீனாட்சிபுரம் | மேலூர் | மதுரை |
| 6. | திருவாதவூர் கல்வெட்டு, திருவாதவூர் | ,, | ,, |
| 7. | கருங்காலக்குடி கல்வெட்டு, கருங்காலக்குடி | ,, | ,, |
| 8. | பாண்டியர் கல்வெட்டு படுக்கை, இராமநாதபுரம் | வேடசந்தூர் | திண்டுக்கல் |
| 9. | பூலாவுடையார் கல்வெட்டு, சீவலப்பேரி | பாளையங் கோட்டை | திருநெல்வேலி |
| 10. | அதியமான் பெருவழிக்கல் (மைல்கல்), பக்கிரிமேடு | தருமபுரி | தருமபுரி |

சிற்பங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | கலிங்கச் சிற்பங்கள், செங்கமேடு | உடையார் பாளையம் | பெரம்பலூர் |
| 2. | தீர்த்தங்கரர் சிற்பங்கள், ஆனைமலை | மதுரை | மதுரை |
| 3. | குகைக்கோயில் சின்னஜவர் மலை சிற்பங்கள், ஐவர்மலை | பழனி | திண்டுக்கல் |

| வ. எண். | சின்னத்தின் பெயர் | வட்டம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 4. | இராசாக்கல் மங்களம் சிற்பம், இரணியன் குடியிருப்பு | நாங்குநேரி | திருநெல்-வேலி |
| 5. | சப்தமாதர் சிற்பங்கள், பெருங்காஞ்சி | வாலாஜா பேட்டை | வேலூர் |
| **தூண்** | | | |
| 1. | பத்துத் தூண்கள், மதுரை | மதுரை | மதுரை |
| 2. | நினைவுத் தூண், சைதாப்பேட்டை | கிண்டி-மாம்பலம் | சென்னை |
| **ஓவியங்கள்** | | | |
| 1. | பாறை ஓவியங்கள், கீழ்வாலை | திருக்கோயிலூர் | விழுப்புரம் |
| 2. | பாறை ஓவியங்கள், செத்தவரை | திருக்கோயிலூர் | விழுப்புரம் |
| 3. | பாறை ஓவியங்கள், ஆலம்பாடி | திருக்கோயிலூர் | விழுப்புரம் |
| 4. | பண்டைய கால ஓவியங்கள், வேட்டைக்காரன் மலை, | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் |
| 5. | நரசிம்மபுரம் ஆர்மாமலை குகை, மலையம்பட்டு | குடியாத்தம் | வேலூர் |
| **பொது** | | | |
| 1. | கபிலர் மலை, பெண்ணாறு நதி | திருக்கோயி-லூர் | விழுப்புரம் |
| 2. | மாளிகை மேடு, உள்கோட்டை | உடையார் பாளையம் | பெரம்பலூர் |

| வ. எண். | சின்னத்தின் பெயர் | வட்டம் | மாவட்டம் |
| --- | --- | --- | --- |
| 3. | அமராவதி ஆற்றுப்படுகை, தாந்தோணி | கரூர் | கரூர் |
| 4. | நெற்களஞ்சியம், திருப்பாலைத்துறை | பாபநாசம் | தஞ்சாவூர் |
| 5. | கோவலன் பொட்டல், பழங்காநத்தம் | மதுரை | மதுரை |
| கோட்டைகள் | | | |
| 1. | ஆலம்பறை கோட்டை, ஆலம்பறை | செய்யூர் | காஞ்சிபுரம் |
| 2. | கருங்குழிக் கோட்டை, கருங்குழி | மதுராந்தகம் | காஞ்சிபுரம் |
| 3. | வந்தவாசிக் கோட்டை, வந்தவாசி | வந்தவாசி | திருவண்ணாமலை |
| 4. | ஜெகதேவி கோட்டை, ஜெகதேவிபாளையம் | கிருஷ்ணகிரி | தர்மபுரி |
| 5. | தியாக துருகம் கோட்டை, தியாக துருகம் | கள்ளக்குறிச்சி | விழுப்புரம் |
| 6. | டேனிஷ் கோட்டை, தரங்கம்பாடி | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் |
| 7. | மனோரா, சரபேந்திர ராஜபட்டினம் | பட்டுக்கோட்டை | தஞ்சாவூர் |
| 8. | கமுதிக் கோட்டை, கமுதி | முதுகுளத்தூர் | இராமநாதபுரம் |

| வ. எண். | சின்னத்தின் பெயர் | வட்டம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 9. | மருதுபாண்டியர் கோட்டை, அரண்மனை சிறுவயல் | காரைக்குடி | சிவகங்கை |
| 10. | கட்டபொம்மன் கோட்டை, பாஞ்சாலக்குறிச்சி | ஒட்டப்பிடாரம் | தூத்துக்குடி |
| 11. | உதயகிரி கோட்டை (ம) டி லேன்னாய் கல்லறை புலியூர் குறிச்சி. | கல்குளம் | கன்னியாகுமரி |

## துறை வெளியீடுகளின் விலைப்பட்டியல்
## (Departmental Publications)

| வ. எண் | புத்தகத்தின் பெயர் | ரூ. பை. |
|---|---|---|
| 1. | தருமபுரி கல்வெட்டுகள் (முதல் தொகுதி) | 9.50 |
| 2. | திருத்துறைப்பூண்டி கல்வெட்டுகள் | 18.00 |
| 3. | கன்னியாகுமரிக் கல்வெட்டுகள் (நான்காம் தொகுதி) | 7.50 |
| 4. | கன்னியாகுமரிக் கல்வெட்டுகள் (ஐந்தாம் தொகுதி) | 7.50 |
| 5. | நன்னிலம் கல்வெட்டுகள் (முதல் தொகுதி) | 15.00 |
| 6. | நன்னிலம் கல்வெட்டுகள் (இரண்டாம் தொகுதி) | 15.00 |
| 7. | நன்னிலம் கல்வெட்டுகள் (மூன்றாம் தொகுதி) | 15.00 |
| 8. | தக்கை இராமாயணம் (முதல் தொகுதி) | 36.00 |
| 9. | திருக்கோடிகா கல்வெட்டுகள் | 27.00 |
| 10. | தமிழ்க் கீர்த்தனைகள் | 37.00 |
| 11. | திருக்குறள் பழைய உரை | 43.50 |
| 12. | குருபரம்பரை புராணம் (இரண்டாம் தொகுதி) | 60.00 |
| 13. | திருவீழிமிழலை கல்வெட்டுகள் | 116.00 |
| 14. | விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்ட வரலாறு | 100.00 |

| வ. எண் | புத்தகத்தின் பெயர் | ரூ. பை. |
|---|---|---|
| 15. | திருமலை நாயக்கர் செப்பேடுகள் | 52.00 |
| 16. | நெல்லை மாவட்ட கையேடு | 97.00 |
| 17. | பெருமுக்கல் கல்வெட்டுகள் | 48.00 |
| 18. | தொல்லியல் நோக்கில் தமிழகம் | 80.00 |
| 19. | தாமரைப்பாக்கம் கல்வெட்டுகள் | 30.00 |
| 20. | வரலாறும் கலையும் | 30.00 |
| 21. | கல்வெட்டு காலாண்டிதழ் 59 | 2.00 |
| 22. | கல்வெட்டு காலாண்டிதழ் 60 & 61 | 4.00 |
| 23. | கல்வெட்டு காலாண்டிதழ் 62, 63, 64 (தனிப் பிரதி) | 5.00 |
| 24. | ஆய்வில் பூத்த மலர்கள் | 90.00 |
| 25. | தமிழர் நாகரீகம் | 221.00 |
| 26. | திருமலை நாயக்கர் அரண்மனை துணை மடல் | 5.00 |
| 27. | Padavedu Excavations | 22.00 |
| 28. | Thiruthani Velancheri Copper Plates | 30.00 |
| 29. | Studies in Ancient Township of Pudukottai | 80.00 |
| 30. | Collected Papers by R. Thirumalai | 200.00 |
| 31. | Collected Papers by Natana Kasinathan | 50.00 |
| 32. | Thirukkoiyilur Excavation | 134.00 |
| 33. | Metropolis of Medieval Cholas | 1.50 |
| 34. | Tamil Nadu Archaeology Perspectives in English | 44.00 |

| வ. எண் | புத்தகத்தின் பெயர் | ரூ. பை. |
|---|---|---|
| 35 | New light on Tamil Art & Culture | 15.00 |
| 36 | Excavation at Mangudi | 76.00 |
| 37. | Excavation at Perur | 64.00 |
| 38. | திருவலஞ்சுழி கல்வெட்டுக்கள் | 96.00 |
| 39. | திருவாரூர் மாவட்டத் தொல்லியல் வரலாறு | 155.00 |
| 40. | விருதுநகர் மாவட்ட வரலாறு | 128.00 |
| 41. | இராமலிங்க விலாச அகழ்வைப்பகக் கையேடு | 3.00 |
| 42. | கல்வெட்டு காலாண்டிதழ் 63 | 5.00 |
| 43. | கல்வெட்டு காலாண்டிதழ் 64 | 5.00 |
| 44. | கல்வெட்டு காலாண்டிதழ் 65 | 5.00 |
| 45. | The Pandian Townships Part - I | 521.00 |
| 46. | The Pandian Townships Part - II | 533.00 |
| 47 | Tarangampadi (Tranquebar) Excavation and Conservation Report | 31.00 |
| 48. | Excavations of Archaeological Sites in Tamilnadu (1969-95) | 66.00 |
| 49. | தமிழக கோயிற் கலைகள் | 17.00 |
| 50. | Tarangampadi - R. Nagasamy | 17.00 |